University of Jaffna ... RECEIVED

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 30 | துல்ஹஜ்தா 7 | இதழ் 25
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 12-06-1989

## பாடசாலைகள் இன்று திறக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாணங் களிலுள்ள சகல பாடசாலைக ளும் இன்று திறக்கப்படவுள் ளது.

தென்பகுதியில் கடந்தபுதன் கிழமை மாணவர்கள் ஆர்ப் பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்துகடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்க ளும் பாடசாலைகள் மூடப் பட்டன.

மூடப்பட்ட பாடசாலைகளை திறப்பது குறித்து அந்தந் தப்பகுதி அதிபர்கள் முடிவெ டுத்து பாடசாலைகளைத் திறக் கலாம் என்று கல்வி அமை ச்சு அறிவித்திருந்தது.

தென் பகுதியில் நடக்கும் பிரச்னைகளை சாட்டாக வைத்து வடக்கு - கிழக் கிலுள்ள பாடசாலைகளை மூடிய செயலைக் கண்டித்த வடக்கு-கிழக்கு முதலமைச்சர் திரு.அ.வரதராஜப்பெருமாள் இன்று முதல் சகல பாடசாலை களும் திறக்கப்படுமென்று அறிவித்துள்ளார்.

கொழும்பிலும் நேற்றுக் கூடிய அதிபர்கள், ஆசிரியர் கள், மாணவத் தலைவர்கள்

(8-ம்பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் காணுமற்போகும் மாணவர், இளைஞர்கள்

# ஜே. வி. பி. யின் முகாம்களில் ஆயுதப்பயிற்சி பெறுகின்றனர்?

## மாணவர்களின் திடீர்மறைவு குறித்து பொலிஸ் மா அதிபர் கவலை

(கொழும்பு)

தென்பகுதியில் பாட சாலை மாணவர்களும், இளைஞர்களும் திடீர் திடீரென காணுமற் போவதாகவும், இவ் வாறுகாணுமற்போகின் றவர்கள் தீவிரவாத இயக்கமான ஜே.வி.பி. யின் இரகசிய முகாம் களில் ஆயுதப் பயிற்சி பெறுவதாகவும் பொலிஸ் வட்டாரங் களில் நம்பப்படுகிறது.

பிள்ளைகளை யாரும் அபகரித் துக்கொண்டு செல்லவோ, பல விதமான இரகசிய முகாம்க ளில் ஆயுதப்பயிற்சிபெறவோ இடமளிக்கவேண்டாம் என்று பொலிஸ் மாஅதிபர் திரு. ஏனர்ஸ் பெரேரா பெற்றோ ருக்கு விடுத்துள்ள வேண்டு கோள் ஒன்றில் கேட்டுள்ளார்.

தென்பகுதியில் அண்மைக் காலமாக இவ்வாறு மாணவர்களும் இளைஞர்களும் காணுமற்போகும் சம்பவங் கள் அதிகரிப்பதாகவும் இவர் களில் பலர், கட்டாயப்படுத்

(8-ம் பக்கம் பார்க்க)

## பயணிகள் தாக்கப்பட்டனர்

(வடமராட்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வந்துகொண் டிருந்த பஸ்சில் பிரயாணம் செய்த பலர் தாக்கப்பட்ட தாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில்தாக்குதலுக் குள்ளான தம்பிராசா பரஞ் சோதி (வயது 46), ஆர்.தியா கேசர் (வயது 40) இருவரும் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்கள்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத் திலிருந்துவந்த இந்த பஸ்ஸில் வந்தவர்கள் நீர்வேலியில் வைத்து தாக்கப்பட்டனராம்.

## பொலிஸ் படைக்கு மேலும் 5,000பேர்

(கொழும்பு)

பொலிஸ் படைக்கு புதி தாக மேலும் 5 ஆயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள் ளது.

அடுத்த 15ம் திகதியளவில் இந்த 5 ஆயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## வாலிபரும் வர்த்தகரும் சுட்டுக்கொலை

[வடமராட்சி]

இராச கிராமத்தில் (கன் பொல்லை) வாலிபர் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட் டார்.

நேற்று காலை 8-30 மணி யளவில் இராசகிராமத்தைச் சேர்ந்த வாலிபரான அப் பாச்சி என்பவர் இனந்தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

## சகல தரப்பினருடனும் பேசி வெளியேற்றம் அமையவேண்டும்!

### அமைதிப்படை விலகல் குறித்து ஈரோஸ் சங்கர்

[கொழும்பு]

''வடக்கு-கிழக்கு இணைக்கப் படவில்லை. மாநிலங்களுக்கு போதிய அதிகாரம் வழங்கப் படவில்லை. தமிழ் மக்களுக்கு பாதுகாப்பில்லை. இந்நிலையில் இந்திய அமைதிப்படையின் வெளியேற்றமானது மக்களை நட்டாற்றில் விட்டதுபோலா கிவிடும். எனவே சகல தரப் பினருடனும் பேசி வெளியேற் றம் அமையவேண்டும்.''

இவ்வாறு ஈரோஸ் இயக் கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. தி. சங்கர் ராஜி கொழும்பிலிருந்துவெளி வரும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றம் செல்வ தென்ற முடிவெடுக்கமுன்னர் யாருடனேனும் ஆலோசிப்பீர் களா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் களத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் பிரபல கல்லூ ரிகள் அமைந்துள்ள இடங் களில் விசேட பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று மீண்டும் பாடசாலை கள் திறக்கப்படுவதையொட் டியே இப்பாதுகாப்பு நடவடிக் கைகள் பலப்படுத்தப்பட்டுள் ளன.

## நிர்வாகத்தைபொறுப்பேற்க மாகாணசபை முடிவு

### அரசிடம் கேட்டுப் பலனில்லை என்கிறார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் எல்லா துறைகளின் நிர் வாக கட்டுப்பாட்டையும் தனது நேரடிப் பொறுப்பில் எடுத்துக்கொள்வதென்று வட -கிழக்கு மகாணசபை தீர்மா னித்துள்ளதாக முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வானொலிக்கு வழங் கிய சிறப்புப் பேட்டி ஒன்றில் இத்தகவலை தெரிவித்த முத லமைச்சர் மகாண சபைக்கு அதிகாரங்களை பரவலாக்கும் படி இலங்கை ஜனாதிபதியிடம் பல தடவை கேட்டும் எதுவித பலனும் இல்லாது போன தாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிட்

(8-ம் பக்கம் பார்க்க]

## இந்திய வெளிநாட்டுக் கொள்கை: பாரதீய ஜனதா கண்டனம்

(புதுடில்லி)

இந்தியாவின் எதிர்க்கட்சி யான பாரதிய ஜனதா கட்சி ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின்வெளிநாட்டுக்கொள் கையை வன்மையாகக் கண் டித்திருக்கிறது.

எதிர்வரும் பொதுத் தேர் தலில் பாரதீய ஜனதா கட்சி யின் நடைமுறைகள் பற்றி விளக்குவதற்கான கூட்டம் நடைபெற்றபோது அதில் உரையாற்றிய திரு. எல்.கே.

(8ம் பக்கம் பார்க்க)

## வெள்ள அகதிகளுக்கு பிரிட்டனும் உதவி

(கொழும்பு)

வெள்ள அகதிகளுக்கென பிரிட்டன் அறுபது தொன் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்திருக்கிறது.

இதன் முதல்தொகுதி நேற்று லண்டனிலிருந்துகட்டு நாயக்காவுக்குக் கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## 6 வாரத்தில் 1001 பேர் படுகொலை

(கொழும்பு)

நாடு முழுவதும் கடந்த 6 வார காலத் தில் வன்முறை சம்வங் களினால் 1001 பேர் கொல்லப்பட்டுள்ள னர்.

ஏப்ரல் 22ம் தேதி முதல் இம்மாதம் 3ம் தேதிவரை இக்கொலை கள் நடந்துள்ளது. இவர்களில் 493 பேர் தீவிரவாதிகள் எனக் கூறப்படுகிறது.

## உள்ளூராட்சிதிணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்தபணம் பயன்படுத்தப்படாததால் ரூபா 40 லட்சம் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

'யாழ். மாவட்ட உள்ளு ராட்சித் திணைக்களத்துக்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட் டிருந்த நாற்பது [illegible] வும் பயன்படுத்[illegible] திரும்பிவிட்டது'

இவ்வாறு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணை யாளர் திரு. கே. டிவகலாலா நேற்று யாழ். வேம்படி மக [illegible] பெற்ற யாழ்ப்பாண மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொ ண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சமாசத் தலைவர் திரு.கோ. தியாகராசா தலைமையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## கம்பர்மலை சம்பவம்

[வடமராட்சி]

கம்பர்மலையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற அசம்பா விதங்களையடுத்து பொதுமக் கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை கம்பர்மலை, கொம்மந்துறை, மாதாங்கோவில் பகுதியில் கிறைனேட் வீச்சுசம்பவம்ஒன்று இடம்பெற்றதையடுத்து துப் பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட் டதுடன் ஷெல்தாக்குதலும் இடம்பெற்றன.

மேற்படி சம்பவங்களினால் அதிக சேதம் எதுவும் இல் லாதபோதும் பயத்தினால் மக் கள் பலர் இடம் மாறினார் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அமைதிப்படை வாபஸ்இல்லையேல் அடுத்த நடவடிக்கை என்ன?"

## பாராளுமன்றத்தில் 'அனுரா' கேள்வி

(துவான் நஸீர்)

இந்தியப்படைகள் இந் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் இருந்து நாம் விலகமாட்டோம். ஆனால் இந்தியப்படை விலகும் முன் இரு விடயங்களை அரசு சிந்தித்துப் பார்த்து செயலாற்றவேண்டும். இந்தியப்படை வெளியேற வேண்டும் என அரசும் கோரிக்கை விடுத்துள்ளது. அவ்வாறு இந்தியப்படைகள் இலங்கையை விட்டுப்போக மறுத்தால் அரசு அடுத்து செய்ய உத்தேசித்துள்ள நடவடிக்கைஎன்ன? அவ்வாறு இந்தியப்படையும் வடக்கு கிழக்கில் இருந்து வெளியேறும் பட்சத்தில் அங்கு தற்போது காணப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், எதிர்த்துப்போராடவும் இலங்கை இராணுவம் தயாராக இருக்கிறதா?

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. அனுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

திரு. அனுரா பண்டாரநாயக்க மேலும் பேசுகையில் கூறியதாவது:

கிழக்கில் நேற்றுக்கூட பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ஜே. வி. பி. இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகிறது. இது எமது தனிநபர் பிரச்சினை அல்ல. நாட்டுப் பிரச்சினை என்பதால் தான் இவ்வாறு கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

### ராஜீவ் மீது சந்தேகம்

படைகளை வாபஸ் வாங்குவது தொடர்பாக விடுக்கப்பட்டவேண்டுகோளில் இந்திய அரசின்நிலைபற்றி அரசுஎதிர்க் கட்சிகளுக்கு தெளிவுபடுத்தவில்லை, இந்தியப்படைகளை திரு. ராஜீவ் காந்தி வாபஸ் வாங்குவார் என்பதில் நாம் சந்தேகப்படவேண்டியுள்ளது.

### ராஜீவை திலகரத்ன சந்திக்கவில்லை?

திரு. பேர்ணர்ட் திலகரத்னவுக்கு இந்திய அரசாங்கம் சரியான வரவேற்பு கொடுக்கவில்லை எனவும், அவர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்திக்கவில்லை எனவும் செய்திகள் வெளிவருகின்றன. இதிலிருந்து எதிர்வரும் ஜூலைக்குள் இந்தியப்படைகள் வாபஸ் பெறப்படமாட்டாது எனறே தெரிகிறது.

அரசு இந்த விடயத்தில் மிகக் கவனமாக செயலாற்ற வேண்டும். இந்தியப்படைகள் போகும் பட்சத்தில் வடக்கு கிழக்கு நிலைமைகளை சீர்படுத்தவும் அமைதி நிலைநாட்டவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இந்தியப்படைகள் வாபஸ் தொடர்பாக இந்திய அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் எமக்கும் அறிவிக்கப்படவேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்தியப்படைகள் வெளியேறும் பட்சத்தில் இப்படைகளினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். (து)

# "ஜூலைக்குள் விலகுமென உறுதிகூற முடியாது"

## ரஞ்சன் விஜயரத்ன பதில்

(கொழும்பு)

இந்தியப் படை வாபஸ் வாங்குவது தொடர்பாக எமக்கு திரு. ராஜீவ் காந்தி உறுதியளித்துள்ளார். இந்தியப் படை இங்கிருந்து வெளியேறமாட்டாது என்று கூற முடியாது. எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் இந்தியப்படை வாபஸ் பெறப்படும் என உறுதி கூறமுடியாது. ஏனெனில் 40 ஆயிரம் துருப்புக்களை இந்தியா திரும்ப அழைத்துக் கொள்வதற்கு சற்று தாமதம் ஏற்படலாம் ஆயினும் நீங்கள் நினைப்பது போல உங்களுக்கு சாதகமான ஒரு நிலை உருவாகும் என எதிர்பார்க்க வேண்டாம்.

இவ்வாறு வெளி விவகார அமைச்சரும் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரு. அனுரா பண்டாரநாயக்கா இந்தியப் படை வெளியேறுவது தொடர்பாக கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்து பேசும்போதே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து இந்தியப் படை வெளியேறும் பட்சத்தில் இப்பிரதேசங்களின் பாதுகாப்பு தொடர்பாக பல கேள்விகள் எழுப்பப்பட்டன. உண்மையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து இந்தியப் படைகள் வாபஸ் பெறுவதை அங்குள்ள சில கட்சிகள் விரும்பவில்லை. எனினும் இந்தியப் படை வெளியேற்றப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கையில் மாற்றம் எதுவும் இருக்காது. இந்தியப் படை வாபஸ் பெறுவதை விரும்பாத கட்சிகள் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு ஆமைவாக சத்தியப்பிரமாணம் செய்துதான் பதவிக்கு வந்துள்ளனர் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் எமது படையினரில் எவ்வளவு பேர் உள்ளனர் என்பதும் அவற்றின் பலம் பற்றியும் நாம் அறிந்திருக்கிறோம்.

### வேற்று நாட்டு படை வராது

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து இந்திய ராணுவம் வெளியேறும் பட்சத்தில் அங்கு இலங்கை இராணுவம்தான் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபடுத்தப்படுமே ஒழிய வேறு எந்த நாட்டின் படையும் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படமாட்டாது. புதிதாக நாம் இராணுவத்தில் ஆட்களை சேர்த்துக்கொண்டிருக்கிறோம் இந்தப் புதிய படைக்கு எல்லா இனத்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எந்தப் பாகுபாடும் இல்லாத வகையிலேயே இலங்கை இராணுவம் புனரமைக்கப்படுகிறது.

### வடக்கு கிழக்கையும் எமது இராணுவம் பாதுகாக்கும்

தெற்கில் பயங்கரவாதத்துக்கு எதிராக இப்போது எமது இராணுவம் போராடுகிறது இந்த நிலையிலும் வடக்கு கிழக்கின் நிலைப்பாட்டுக்கு எமது இராணுவமே தேவைப்படும். எம்மால் இயன்ற அளவுக்கு வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்த முயல்வோம். வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சகலரையும் எமது இராணுவமே பாதுகாக்கும். (து)

# மனைவியுடன் 5 பிள்ளைகளையும் ஆறு சகோதரர்களையும் இழந்த துர்ப்பாக்கியசாலி! மண்சரிவில் அனர்த்தம்

(கண்டி)

மனைவி, பிள்ளைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் மண்சரிவுக்குப் பலியான நெஞ்சை நெகிழவைக்கும் சம்பவம் ஒன்று கினிகத்தனையில் இடம்பெற்றது.

ஆறு சகோதர, சகோதரிகளுடன் மனைவியும் ஐந்து பிள்ளைகளையும் மண்சரிவுக்குப் பலிகொடுத்த துர்ப்பாக்கியசாலி கினிகத்தனையைச் சேர்ந்த ஏ. இரத்நாயக்கா என்ற கிராமவாசியேயாவார்.

இதுபற்றி தெரியவருவதாவது: இரத்நாயக்கா தனது வீட்டிலிருந்தபோது இவரது சகோதர, சகோதரிகள் இருக்கும் அம்பன பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக அயலவர் மூலம் இவருக்கு ஒரு செய்தி கிடைத்தது.

உடனடியாக அவ்விடம் சென்ற இரத்நாயக்கா அங்கு ஏற்பட்ட மண்சரிவில் வீடு முற்றுமுழுதாக மூடப்பட்டிருப்பதைக் கண்டார். வீட்டிலிருந்த சகோதர, சகோதரிகள் ஆறு பேரும் உயிருடன் மண்ணுக்குள் புதையுண்டதை அயலவர்கள் மூலம் அறிந்து கொண்டு சோகத்துடன் வீடு திரும்பினார்.

இரத்நாயக்கா தமது வீட்டுக்கு வந்தபோது அவரது வீடும் மண்சரிவினால் மூடப்பட்டிருப்பதைக் கண்டு பதை பதைத்துப்போனார். அவரது மனைவியும் ஐந்து பிள்ளைகளும் இங்கு மண்சரிவினுள் உயிருடன் புதையுண்டு போயினர்.

# கல்வி டிப்ளோமா பயிற்சி பெற பட்டதாரி ஆசிரியர்களுக்கு கடமை லீவு

## அமைச்சர் உறுதி

(கொழும்பு)

புதிதாக நியமனம் வழங்கப் படஇருக்கும் 25 ஆயிரம் ஆசிரி[illegible] முஸ்லிம்களுக்கும் [illegible] வழங்கபபடும் என கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சர் டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார உறுதி அளித்துள்ளார்.

தம்மைச் சந்தித்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டுபிரதிநிதிகளிடமே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

கல்வி அமைச்சிலிருந்தும்

(8-ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதியாக விருக்கும் (Holland, OR, U. K) விதை உருளைக் கிழங்கு தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-2931)

கிணற்றடி, சிற்றுண்டிச் சாலை, மாட்டுப்பட்டி மற்றும், பாசிபடரும் நிலங்களை பளிச்சிட M. G. M. பிளிச்சிங் பவுடரை பாவித்து பயனடையுங்கள். சுத்தம் சுகம் தரும். மொத்தமாகவும், சில்லறையாகவும்கிடைக்குமிடம்; M. G.M. 777 K. K. S.Road, 208 1 st Cross street Jaffna. C-2927

சினிவாசகம் வீதி கொட்டடியில் ஐந்து அறைகளைக் கொண்ட சகல வசதிகளையும் உடைய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: பெனடிட், கண்டி ரோட், (A. G. A.) காரியாலயத்திற்குப் பக்கத்தில், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (சி 2914)

### தேவை

பழைய பித்தளை, வெண்கலம், செம்பு கூடிய விலைக்கு வாங்கப்படும். தொடர்புசிவன் மாளிகை லிமிட்டெட், 166, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி 2920)

### பரீட்சை

SLAS பரீட்சைக்குரிய நுண்ணறிவு (பொதுவுளச் சார்பு), கிரகித்தல் ஆகிய புதிய நூல்கள் வெளிவந்துவிட்டன. விடய ஆய்வு விரைவில் வெளிவரும். க. குணராசா, SLAS ஸ்ரீலங்கா புத்தகசாலை/பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். சி-2933

### கல்வி

A/L விஞ்ஞான மாணவ மாணவிகளே! பெற்றுவிட்டீர்களா!! ஆக்கியோன் நாகரட்னம் B. S.c. அவர்களின் வெளியீடுகள் செய்முறை இரசாயனம், தொழில்முறை இரசாயனம், இரசாயன கணிப்புகள் 1, சேதன இரசாயனம் துரிதமாக விற்பனையாகின்றன. பிரதிக்கு முந்துங்கள் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏ-269

### கிளிநொச்சி மாவட்ட பிரதான நீர்ப்பாசனக் குளங்களின்

## திருத்தப்பட்ட நீர்வரி இடாப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இரணைமடு, அக்கராயன், புதுமுறிப்பு, கல்மடு, வன்னேரிக்குளம், கரியாலைநாகபடுவான், கனகாம்பிகைக்குளம் ஆகிய பிரதான நீர்ப்பாசனக் குளங்களின் புதுக்கிய நீர்வரி இடாப்புக்கள், பங்காளரின் பார்வைக்காக அவ்வப்பகுதி கமநலசேவைநிலையங்களிலும், கச்சேரியிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிட்டு, முறைப்பாடுகள் இருப்பின் ஜூன் மாதம் 30-ம் திகதிக்குமுன் எனக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்ரன் அல்பிரட்
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி
மாவட்டம்.

(ஏ 280)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி இடவளவில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 26-06-89-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-ம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை இப்பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

(ஏ27[illegible])


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீன மாணவர் விவகாரம்:
# தலைமறைவாகும் தலைவர்களைத் தேடி
# இராணுவம் தேடுதல் வேட்டை!

## 500 பேர் கைது!!

(பீங்கிங்)

**சீனாவில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தலைமை தாங்கிய மாணவர் தலைவர்களைத் தேடி இராணுவமும், பொலிஸாரும் பெரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இத்தேடுதலில் இதுவரை 500 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர், ஆயிரக் கணக்கான மாணவர்கள் தலைமறைவாகியுள்ளனர்.**

இத்தேடுதல் கடந்த சில தினங்களாக நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்று வருவதாக கூறப்படுகிறது. இந் நடவடிக்கையில் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் கைதாகும் மாணவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பலத்த விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப் படுகிறது.

தேடுதல் நடவடிக்கைகளை யடுத்து மாணவர் தலைவர்கள் தொழிற்சங்க தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஆர்ப் பாட்டத்தில்முன்னணி வகித்த பொதுமக்கள் பலரும் தற் போது தலைமறைவாகியுள்ள னர். ஆர்ப்பாட்டக்காரர்க ளிற்கு எதிராக எதுவித இரா ணுவ நடவடிக்கைகளும் எடுக் கப்படமாட்டாதென்று பிரத மர்லீ-பெங் அண்மையில் கூறி யிருந்த போதும் அவரது வாக் குறுதிகள் மீறப்பட்டு வருவ தாகவும் செய்திகள் கூறுகின் றன.

மாணவர் ஆர்ப்பாட்டங்க ளில் ஈடுபட்ட மாணவர் தலை வர்களையும் தொழிற்சங்க தலைவர்களையும் உடன் சரண டையுமாறு சீன தொலைக் காட்சி இரவு பகலாக எச்ச ரித்து வருகிறது. கைதான பலர் மோசமான முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட தையும் அந்த தொலைக்காட்சி காண்பித்தது.

சீன இராணுவத்தினர் தற் போது மேற்கொண்டு வரும் பல இராணுவ நடவடிக்கை களை தொலைக்காட்சி நிகழ்ச் சிக்கு ஒளிப்பதிவுசெய்த பிரிட் ரிஷ் தொலைக்காட்சி நிறுவன படப்பிடிப்பாளர் ஒருவர் நேற்று முன்தினம்படப்பிடிப்பு கருவிகள் பறிமுதல் செய்யப் பட்ட நிலையில் சீனுவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

## துண்டிக்கப்பட்ட கைகளை பொருத்திய டாக்டர்கள்!

(லெனின்கிராட்)

விபத்தில் துண்டிக்கப்பட்ட கைகளை மீண்டும் முன்புபோல் பொருத்தி சோவியத் வைத் தியர்கள் சாதனைபுரிந்துள்ள னர்.

இயந்திர தயாரிப்புதொழிற் சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளி ஒருவரின் இரு கைகளும் ஒரு விபத்தில் துண் டிக்கப்பட்டன. துண்டிக்கப் பட்ட கைகளை லெனின் கிராட் இராணுவ ஆஸ்பத் திரி வைத்தியர்கள் 16 மணி நேரம் தீவிர சத்திர சிகிச்சை செய்து மீண்டும் பழைய நிலை யில் வெற்றிகரமாக பொருத் தினர்.

50 வயதுடைய இந்ததொழி லாளிக்கு சத்திர சிகிச்சை முடிந்த உடனேயே துண்டிக் கப்பட்ட பகுதிகளுக்கு முழு அளவில் இரத்த ஓட்டம் தொடங்கியது, இப்போது அவர் எவரது உதவியின்றியும் பல வேலைகளை செய்கிறார்.

எனினும் வைத்தியர்கள் அவருக்கு பல பயிற்சிகளை அளித்து வருகிறார்கள்.

## கொமெய்னியின் மறைவின் பின் இடம்பெற்ற சம்பவங்களில் 100 பேர் பலி

(தெஹ்ரான்)

ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி காலமானதையடுத்து இடம் பெற்ற சம்பவங்களில் நூறுக் கும் மேற்பட்டோர் பலியான தாகவும் 438 பேர் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரி களில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும் கொமெய்னியின் மர ணச் சடங்குகளிற்கு நியமிக்கப் பட்ட குழு தெரிவித்துள்ளது.

ஈரானின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறை சம்ப வங்களில் பதினொராயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ள னர். இவ்வாறான சம்பவங்கள் ஆன்மீகத் தலைவரின் திடீர் மரணம் மக்களை பெரிதும் பாதித்ததால் ஏற்பட்டதாக வும் அக்குழு கூறியது.

கொமெய்னியின் ஜனஸா நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் தற்போது தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் குழுமியிருக்கிறார்கள். இதற் கான பல ஏற்பாடுகள் வழங் கப்பட்டுள்ளது. மேலும் நாட் டின் பல பகுதியிலுமிருந்து தினமும் ஆயிரக்கணக்கானோர் இங்கு வந்து கூடுவதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது.

### தனிச் சிங்களத்தில் படிவம்

(பலாலி)

சுகாதாரசேவை சிற்றூழி யர்களுக்கு அரசால் வழங்கப் படும் லீவு விண்ணப்பப்படிவம் தனிச்சிங்களத்தில் மட்டும் அனுப்பப்பட்டுவருகிறது.

இதனால் சிற்றூழியர்கள் படிவத்தை சரியானமுறையில் நிரப்பமுடியாது தமக்குத் தெரிந்ததை மட்டும் நிரப்பி லீவு எடுத்து வருகின்றனர்.

### சிரமதானவேலை

(பூநகரி)

பூநகரி கௌதாரிமுனை வீதி கேடெக்ஸ் ஸ்தாபனம், சர் வோதய இயக்கம், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அங்குள்ள சமூக அமைப்புக்களின் உதவியுடன் சிரமதான முறையில் திருத்தி அமைக்கப்பட உள்ளது.

## ஒட்டுக் கேட்டதன் எதிரொலி
## தமிழகத்தில் காங்கிரஸ் பிளவுபடுகிறது; மூப்பனார் தலைமையில் புதிய கட்சி

[சென்னை]

தமிழ்நாடு முன்னாள் காங் கிரஸ் தலைவர் திரு. கருப் பையா மூப்பனார், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிப் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க வுள்ளார். இக்கட்சி காமரா ஜர் பிறந்த தினமான ஜூலை மாதம் 15ந் திகதி ஆரம்பிக் கப்படுமெனத் தமிழக ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. இக்கட்சிக்கு காமராஜர் காங் கிரஸ் எனப் பெயரிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழக சட்ட மன்றத் தேர் தலுக்கு 10 தினங்களுக்கு முன்பு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதிக்கும் அப் போதைய காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாருக்கும் இடையில் நடைபெற்ற இர கசியத் தொலைபேசிப் பேச்சு ஒன்று உளவுத் துறையின் மைக்கிரோ டேப்பில் பதிவு செய்யப்பட்டு, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைக்கப்பட்டதாம். இதனால் திரு. மூப்பனாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, தமிழ்நாடு காங்கிரஸ் தலை மைப் பொறுப்பு இவரிடம் இருந்து நீக்கப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையில், ''காங்கிரஸ் தோற்றாலும் பர வாயில்லை. ஜெயலலிதா தோற்றால் சரி''யெனப் பேசப் பட்டதாகப் பதிவுசெய்யப்பட் டுள்ளது. இதனால் அவருக்குக் கட்சியின் செல்வாக்கு குறைந் திருப்பதாக அரசியல் அவதா னிகள் கருதுகிறார்கள். இந்நிலை மையை அடுத்துப் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்து, மூப்ப னார் ஆதரவாளர்கள், பேரணி ஒன்றைச் சென்னையில் ஜூலை மாதம் 15ந் திகதி நடத்தவுள் ளனர்.

இதற்கிடையில் தி. மு. க. ஆட்சியைக் கண்டித்து தமி ழக காங்கிரஸ், கடந்த வியா ழக்கிழமை தமிழகத்தில் நடத் திய கண்டன ஆர்ப்பாட்டம் பிசுபிசுத்துப் போனதாகக் கூறப்படுகிறது. இதில் சுமார் 200 பேரே கலந்துகொண்ட னர். அனைத்து இந்திய அண்ணா தி. மு. க. உறுப்பி னர் எவரும் கலந்துகொள்ளா ததும் குறிப்பிடத்தக்கது. [ச]

## 'கல்வி வளர்ச்சியின்மூலமே ஏனைய துறைகள் விருத்தி அடையும்'

(மருதங்கோணி)

''யாழ். மாவட்டத்திலுள்ள பின் தங்கிய பிரதேசங்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்க ளது ஒத்துழைப்பு அவசியம் வேண்டும்''

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. பா. சந்திரசேகரம் உடுத்துறை மகாவித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

உடுத்துறை மகாவித்தியா லய அதிபர் திரு. க. வை. இராசலிங்கம் தலைமையில் போட்டி நடைபெற்றது.

இவ்வைபவத்தில் திரு. சந் திரசேகரம் தொடர்ந்து உரை யாற்றும்போது, ''பின்தங் கிய பிரதேசங்களில் முதலில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத் துவதன் மூலமே அப்பிரதேசத் தின் ஏனைய துறைகளை அபி விருத்தி செய்ய முடியுமென்று கூறினார்.

போட்டிகளில் வெற்றியீட் டிய மாணவர்களுக்கான பரி சில்களை திரு. சந்திரசேகரம் வழங்கினார்.

## சோவியத்துடன் நல்லுறவு பாகிஸ்தான் முயற்சி

(இஸ்லாமாபாத்)

சோவியத் யூனியனுடன் மேலும் நல்லுறவுகளை விஸ் தரிக்க விரும்புவதாக பாகிஸ் தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

சோவியத் அமைச்சரவை யின் புதிய தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள திரு. நிக்கொலஸ் ரிஷ்கோவை பாராட்டி அனுப்பிவைத் துள்ள கடிதமொன்றிலேயே பாகிஸ்தான் பிரதமர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளும் பரஸ்பரம் நல்லுறவுகளை வளர்ப்பதன் அவசியம் குறித்தும் இவர் தமது கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார்.

அண்மையில், கடந்த பல வருடங்களின் பின் சோவியத்- சீன நல்லுறவு பலமடைந் திருப்பதையடுத்து பாகிஸ் தானும் தற்போது இம்முயற் சியில் ஈடுபட்டுள்ளதாக அர சியல் அவதானிகள் கூறியுள் ளனர்.

## பழைய இடத்தில் மூலப்பிரதிகள்

[சுண்டுக்குளி]

பிறப்பு-இறப்புப் பதிவுப் புத் தக மூலப் பிரதிகள் மீண்டும் பழைய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

1987ம் ஆண்டு பிற்பகுதியி லிருந்து கடந்த பெப்ரவரி மாதம் வரை சுமார் 15 ஆயி ரம் பிறப்பு-இறப்பு விண்ணப் பப் பத்திரங்கள் பிறப்பு-இறப் புக் காரியாலயத்தில் தேங்கிக் கிடந்தன.

இவற்றைத் துரித கதியில் வழங்குவதற்காக மேற்படி பிரதிகள் [illegible] கூட்ட மண்டபத்திற்கு எடுத் துச் செல்லப்பட்டது.

## மதிய போசனம் இல்லை; அதிபர் உடன் இடமாற்றம்!
### கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை

(நமது நிருபர்)

மதிய போசனம் வழங்கு வதற்கான முற்பணத்தை கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றிருந்தும் மதிய போச னம் வழங்குவதற்கான நட வடிக்கைகளை மேற்கொள் ளாத பாடசாலை அதிபர் ஒரு வர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு அவரின் இடத் திற்கு அயல் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பதில் அதிப ராக நியமிக்கப்பட்டுள்ள தாகத் தெரிகிறது.

மாணவர்களுக்கு வழங்கப் யடும் மதிய போசனத்தை நேரடியாக கண்காணித்து வரும் மன்னார் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தனது பகுதியிலுள்ளதும், போக்கு வரத்து வசதியற்றதுமான ஒரு பாடசாலைக்கு நேரில் சென்ற போது அங்கு மாணவர்கள் மட்டும் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அதி பர் பாடசாலையில் இல்லாதது மட்டுமன்றி மதியபோசனத் திற்கான ஒழுங்குகளும் மேற் கொள்ளப்படாததும் கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிபருக்கு ஸ்தலத்தில் வைத்தே இட மாற்ற உத்தரவு வழங்கப் பட்டதுடன், அயற் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பதில் அதிப ராக நியமிக்கப்பட்டு பாட சாலை நடத்தும் பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

(சுன் - நி - )

### நோயாளர் பாதிப்பு

(சுன்னாகம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அடிக்கடி ஏற்படும் குடிநீர்த் தட்டுப் பாட்டினால் வைத்தியசாலை யில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பாதிக்கப்படு வதுடன் அத்தியாவசிய சேவைகளும் தடைப்படுவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இலட்சியங்கள் தாரகைகள் போன்றவை. அவை களைக் கைக்குள் அடக்கிவிட முயன்ருல் தோல்வி நிச்சயம். ஆனுல் அவைகளை வழிகாட்டிகளாகக் கொண்டு பின்தொடர்ந்து சென்ருல் போகவேண்டிய இடத்தை அடைவது உறுதி.

— கார்ல்ரூஸ்

# நமது நோக்கு

## பனையைத்தான் பார்க்கிறேம் வளம் காண!

பனம் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பனை அபிவிருத்திச்சபை உயர் அதிகாரிகள் கூட்டம் நடத்துகிருர்கள் எனச் செய்தி வந்துள்ளது.

உறபத்தியை அதிகரித்தல், சந்தைப்படுத்தல், ஏற்றுமதி உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தல் போன்ற பல்வேறு அம்சங்கள் ஆலோசிக்கப்பட இருக்கின்றன.

வட கிழக்குப் பகுதியின் பொருளாதார விருத்தியில் பெரும் பங்கை வகிக்க வேண்டியது இயற்கை அன்னை எமக்களித்த மனையே. பனையால் வளம் காணப் பல அறிக்கைகளும் திட்டங்களும் காலத்திற்குக் காலம் வெளிவந்தாலும், அபிவிருத்தி என்னவோ ஆமை வேகம்தான்!

பதார்த்த குணசிந்தாமணியிலே பனம் பொருட்கள் சிலவற்றின் மருத்துவக் குணங்கள் பாடல்களாக உள்ளன. தற்போது தமிழகத்திற் செய்யப்பட்டு வரும் ஆய்வுகளின்படி பனைப் பொருட்களின் சிறப்பான அம்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக, மதுரை மருத்துவக்கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் ஜி. வேங்கடசாமி, கண்நோயினுல் அவதியுற்ற சிலருக்குப் பதநீர் கொடுத்துச் சுகம் கண்டார் எனக் கூறப்படுகின்றது.

சீனிக்குப் பதிலாகப் பனைவெல்லத்தைத் தாராளமாகப் பயன்படுத்தலாம். குளுக்கோஸ், கல்சியம், இரும்பு, வைட்டமின் 'பீ' போன்ற ஊட்டச் சத்துள்ளது பனைவெல்லம். கருவுற்ற பெண்களுக்கும், மகப்பேறு பெற்ற தாய்மாருக்கும் மிகுந்த நலன் விளைக்கவல்லது எனச் சொல்லப்படுகின்றது.

இதன் பாவிப்பால் பற்களை உறுதிப்படுத்தலாம்; இரத்தக்கசிவைத் தடுக்கலாம் பல்நோய்கள் பெருகிவரும் இந்நாளில் இதைக் கவனிப்பார்களா?

இவைபோல, ஓடியல் மா பனங்கற்கண்டுபோன்ற பல ஊட்டச்சத்துள்ள பொருட்களைப் பனையிலிருந்து பெறலாம். நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் பனையிலிருந்து பெறக்கூடிய பல உணவு வகைகளைத் தயாரிக்கும் முறைபற்றி அழகாகப் பாடியுள்ளார்.

தற்போது, பனம் பொருள்களிலிருந்து தயாரிக்கக்கூடிய 23 வகையான உணவுப்பொருட்களின் செய்முறைகளை ஓர் கைநூலாக பனை அபிவிருத்திச் சபை வெளியிட்டுள்ளது. மேலைநாட்டு உணவு வகைகளைக் கற்பிப்பவர்கள், இவற்றையும் கற்பிக்க முன்வரவேண்டும் என்பது எமது பேரவா.

பனைகளைப் பூரணமாகப் பயன்படுத்துகிறேமா? அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின்படி ஏழு லட்சம் பனைகள் இங்குள்ளன. இதில் ஒரு சத விதமானவற்றில்தான் கள் இறக்கப்படுகின்றது; பதநீர் எடுக்கப்படுகின்றது.

காரணமென்ன? சீவல் தொழில் பழைய கால முறைப்படியே நடைபெற்றுவருகின்றது. பனை ஏறுவதில் உள்ள கஷ்டத்தைப் போக்க ஆய்வு நிறுவனம் ஒரு இயந்திரப் பொறி அமைப்பை வெளியிட்டது. பயன்படுத்துபவர்கள் யார்?

தற்போது பதினையாயிரம் குடும்பங்கள் மட்டில் பனையை நம்பி வாழ்வதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். நவீன உத்திகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கினுல் இன்னும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மையடையலாம்.

உற்பத்திகளை சுகாதார முறைப்படி ஆக்கவும், அழகான முறையிற் பொதி செய்யவும், நீண்டகாலத்துக்குப் பழுதுபடாது பாதுகாக்கவும் புதிய தொழில் நுட்பங்களைக் கண்டறிய வேண்டும்.

ஊட்டச்சத்துள்ள பனை உணவுப்பொருட்களைத் தயாரித்தல், குடிசைக் கைத்தொழில்மூலம் கைப்பணிப் பொருட்களை உற்பத்திசெய்தல், பலருக்கு வேலைவாய்ப்பு அளித்தல் போன்ற பாரிய பொறுப்புக்கள் பனை அபிவிருத்திச் சபைக்குண்டு. விரைந்து செயற்படுவார்கள் என நம்புகிறேம்!

### அறத்தின் சேவகி ஆன்ம நாயகி

அறத்தின் சேவகி ஆன்ம நாயகி
ஆதி சத்தினி அனைத்தின் காரணி
மறத்தின் பேரணி மந்த காசினி
மலையன் பேருய் பெற்ற மகிழினி
திறத்தின் சீரணி தெய்வப் பேரொளி
சிந்தைக் கினியநற் தேசுச் சுந்தரி
புறத்தின் கிரிகைகள் புரியும் புங்கவி
புகழினி நாக பூஷணி அம்மாள்

— நாக. சண்முகநாதபிள்ளை.

(இன்று நயினை நாகபூஷணி அம்பாள் 8-ம் திருவிழா)

# மந்திகைக்கு மீண்டும் பிரெஞ்சு வைத்தியர் குழு

(வடமராட்சி)

பார்வை குறைந்தவர்களை பார்வையிட மீண்டும் பிரஞ்சு வைத்தியக்குழுவினர் மந்திகை வைத்தியசாலைக்கு வருகின்ருர்கள்.

கடந்த மாதம் மந்திகை வைத்தியசாலைக்கு வந்து கண் நோயாளர்களைப் பார்வையிட்டுச் சென்ற பிரஞ்சு வைத்தியக்குழு மீண்டும் இம்மாதம் நடுப்பகுதியில் மந்திகை வைத்தியசாலைக்கு வருகை தரவுள்ளார்கள்,

அவ்வேளை ஏற்கனவே பரிசோதித்துச் சென்ற கண் நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை அளிப்பதுடன் கண்ணுடியும் வழங்கவுள்ளதாகவும் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

### சேவைக்காலப் பயிற்சி

(சுன்ஞகம்)

சமூகக்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி வகுப்பு இம்மாதம் 15ம் திகதி சுன்ஞகம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

# வேம்படி முருகன் ஆலய வரலாறும் சிறப்பும்

ப. ஜெகநாதன்

''புன்னெறி யதனுட் செல்லும் போக்கினை விலக்கி
மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து
நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனுக்கி இரு
வினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள்
போற்றி''
[கந்தபுராணம்]

கொக்குவில்-தாவடி வேம்படி முருகமூர்த்தி கோயில் என விளங்கும் முருகப்பெருமான் ஆலயம் கொக்குவில், தாவடிஆகிய இரு கிராமங்களின் எல்லையில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை [10-06-89] ஆரம்பமாகிநடைபெற்றுவரும் இவ்வேளையில் இவ்வாலயத்தின் தொன்மையையும், சிறப்பையும் சிந்திப்பதில் உவகையடைகிறேம்.

சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் பல பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுண்டு. இவ்வாருன ஆலய வரிசையில்கொக்குவில்-தாவடி வேம்படி முருகன் ஆலயமும் ஒன்ருகும்.

கொக்குவில் தாவடிஆகியஇரு கிராமங்களையும் பிரிக்கும் வீதியின் மருங்கில் பல வருடங்களுக்குமுன் ஓங்கி, உயர்ந்து வளர்ந்த வேப்பமரம் ஒன்று காணப்பட்டது,இதன்கீழ் முருகப்பெருமானின் வேலும், வைரவக் கடவுளின் சூலாயுதமும் காணப்பட்டதாக முதியவர்கள்வாயிலாக அறியப்படுகிறது. ஆனுல் இத்தெய்வ வடிவங்களை யார் எப்போதுஇங்கு வைத்து வணங்கத் தொடங்கினுர்கள் என்றவிபரம் அறிந்தவர்களோ, சான்றுகளோ தற்போது இல்லை.

1912 ம் ஆண்துடவில்வேப்ப மரத்தின் கீழ் இருந்த வேல் முருகனுக்கும், வைரவமூர்த்திக்கும் இவ்வூர் மக்கள் ஒரு ஓலைக்கொட்டிலாகக் கோயில் அமைத்து வணங்கி வந்துள்ளார்கள். இவ்வாறு கொட்டிலாக இருந்த ஆலயத்தை 1926 ஆம் ஆண்டு தற்போது ஆதிமூலம் உள்ள இடத்தில் கருங்கல்லாலான கற்பக்கிரகம் அமைக்கப்பட்டு, அதனுள் வேலாயுதப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு இதனை ஒரு முருகன் ஆலயமாகஅமைக்கப்பட்டது.

''உருவேறத் திருவேறும்'' என்பதற்கமைய அடியார்கள் உள்ளன்புடன் பக்தி நிலையில் இறைவனை வணங்கித் திருப்பணிகளைச் செய்யும்போது இறைவனுடைய திருவருட் சக்தி பெருக்கெடுத்து ஓடும். இந்தவகையில் வேம்படி வேலவன் அடியார்களின் பரவச நிலை கண்டு திருவருள் பாலிக்கத் தொடங்கினுன், இதனுல் இக்கிராம மக்கள் மத்தியில் நோய். வறுமை நீங்கத்தொடங்கி மக்கள் சிறப்பாக வாழ்ந்தார்கள் என்று கூறக்கூடிய [illegible]

இதன்பின் 1935 ம் ஆண்டு [illegible] ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் இவ்வாலயத்தில், சிறுகச் சிறுக திருப்பணி வேலைகள் நடைபெற்றன. இக்காலப்பகுதிக்குள் வள்ளி தேவசேனு சமேத முருகப்பெருமான் எழுந்தருளி மூர்த்தியாக ஐம்பொன்னுல் செய்யப்பட்டு வருடாந்த உற்சவம் ஆரம்பிக்கப்பட்டது.

1949ம் ஆண்டளவில் வசந்த மண்டபம் பூர்த்தியாக்கப்பட்டுத் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறத் தொடங்கியது. இத்திருப்பணிகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டு வந்தது. பின் 1972 ம் ஆண்டு சண்முகப் பெருமானுக்குக் கோயில் அமைத்து ஐம்பொன்னுய் ஆன சண்முகப்பெருமான் வள்ளி தேவசேனுவுடன் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

இத்துடன் 1972 ம் ஆண்டு மூலமூர்த்திக்கும், பரிவாரமூர்த்திகளாகிய விநாயகப் பெருமான், நந்தி, ஆறுமுகப்பெருமான், முத்துக்குமாரசுவாமி: வைரவக்கடவுள் ஆகியோருக்கும் மகாகும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்துவைக்கப்பட்டது. மேலும் பல திருப்பணிகள்புரிய அடியார்கள்முன் னின்ருர்கள்.

1976ம் ஆண்டு ஆனி மாத பூர்வபக்க சஷ்டித் திதியில் முதன் முதலாக கொடியேற்ற உற்சவத்துடன் வருடாந்த மகோற்சவம் நடைபெறத்திருவருள் கூடியது. இவ்வாண்டு தொடக்கம் வருடந்தோறும் சிறப்புகள் பலவுடன் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து திருப்பணிகளில் 1979 ம் ஆண்டு ஆறுமுகப்பெருமானுக்குச் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1983 ம் ஆண்டுவிநாயப்பெருமானுக்கு சித்திரத்தேர் அமைக்கப்பட்டது. தற்போது ஆண்டுதோறும் நடைபெறும் இரத உற்சவத்தன்றுவிநாயகப்பெருமான், சண்முகப்பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் தனித்தனி மூன்று சித்திரத் தேர்களில் வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

முன்பு வேம்பின் கீழ் கோயில் கொண்ட வேலாயுதப் பெருமான் மூல மூர்த்தியாக எழுந்தருளியிருக்க சுற்றுப் பிரகாரத்தின் மேற்குப் பக்கத்தில் விநாயகர், மகாலெட்சுமி, துர்க்கை அம்மன், சந்தான கோபாலர், தண்டாயுதபாணி ஆகிய மூர்த்திகளும், தம்ப மண்டபத்திற்கு வடக்கே ஆனந்த தாண்டவமாடும் நடராஜரும் சிவகாமியும் அவர்களுடன் இருக்கும் பேறு பெற்ற மாணிக்கவாசகர் பதஞ்சலி முனிவர் சகிதம் எழுந்தருளியிருக்கிருர்கள் நடராஜருக்கும், தம்ப மண்டபத்திற்குமிடையே நவக்கிரக மூர்த்திகளும், கிழக்குப் பக்கமாக வைரவமூர்த்திவும் பிரதிஷ்டை செய்யப்பெற்று அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிருர்கள். இம்மூர்த்திகளுக்கு 1988 ம் ஆண்டு சித்திரா பௌர்ணமியன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

முருகனின் திருநாளாம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும், தற்போது, மாலையில் விசேட பூசை நடைபெற்று பச்சைமயில் மீது பன்னிருகை வேலவன், பக்தர்களின் பண்ணிசை பின் தொடர வீதியுலா வரும் காட்சி இத்திருக்கோயிலின் தனிச்சிறப்புக்களில் ஒன்ருகும்.

1988 ம் ஆண்டு ஆடிமாதச் செவ்வாய்க்கிழமைகளில் களில் தொடங்கி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் துர்க்கை அம்மனுக்கு தேவி மகாத்மியத்தில் இருந்து தொகுக்கப்பட்டதேவி தோத்திரம் அடியார்களால் பாராயணம்செய்ய, அர்ச்சகர் அம்மனுக்கு அர்ச்சனை செய்யும் வழிபாட்டு முறை நடைபெற்று வருகின்றது. அது மட்டுமல்லாது ஒவ்வொரு மாதமும் வரும் அனுஷ நட்சத்திரத் தினத்தன்றும் மகா லெட்சுமிக்கு விசேட ஹோமம் நடைபெற்றது, அடியார்களுடைய லலிதா திரிசதி பாராயணத்துடன் அபிஷேகம் நடைபெற்று விசேட பூசை நடைபெறுகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

# பலதும் பத்தும்

### உருளைக்கிழங்கு அதறற் சிலே!

உருளைக்கிழங்கு முதலில் உற்பத்தியான இடம் பெரு நாடு. அங்கு வசித்த 'இன்கா' இந்தியர்களே அதனை விளைவித்தார்கள். இவர்களை வெற்றிகொண்ட ஸ்பானியர்கள் இக்கிழங்கை வயிருர உண்டு மகிழ்ந்து, ஐரோப்பாவில் பயிரிடத் தொடங்கினுர்கள்.

பிரஷ்யாவின் மன்னன் தனது தோட்டத்திலே பயிரிட்டு, தனது உணவுப்பட்டியலில் சேர்த்துக்கொண்டான். மன்னனையும் மிஞ்சி விட்டான் பேரன் - இக்கிழங்கைப் பயிரிடாதவர்களுக்குத் தண்டனை என்றே அறிவித்து விட்டான்!

எமது பகுதியிலும் இக்கிழங்குச் செய்கை பரவிவருவது சில ஆண்டுகளாகத்தான். நுவரெலியாக் கிழங்கோடு போட்டி! இதனைச் சிறப்பாகப் பயிரிட அதன் நோய்களைக் களைந்துவிட - விவசாயிகளுக்கு உதவ வேண்டும் விவசாயத்திணைக்களம்.

ஜேர்மனிக்கு இக்கிழங்கை அறிமுகம் செய்த ஸர் பிரான்ஸிஸ் டிரேக் என்பார். அவருக்குச்சிலையே அமைத்து விட்டார்கள் அங்கு!

-- வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. - காங்கிரஸ் கூட்டு உருவாகுமா?

## முயற்சிகள் நடப்பதாக தகவல்

சட்ட மன்றத்துக்கான தேர்தலின்போது தமிழகத்தில் காங்கிரஸ் நம்பிக்கையோடு தனித்துப் போட்டியிட்டாலும், ஏற்பட்ட தோல்வியால அது பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பது உண்மை. மூப்பனார் முதலமைச்சர் ஆகிவிடுவார் என்ற கனவு கண்ட காங்கிரஸ்காரர்களும் உண்டு. அவர்கள் இப்போது பெரும் விரக்திக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில் தீவிர மூப்பனார் எதிர்ப்பாளரான வாழப்பாடி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது மூப்பனாரின் ஆதரவாளர்களிடையே பெரும் கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இதெல்லாம் மேலெழுந்தவாரியாகத்தோற்றமளிக்கும் விஷயமே தவிர இதற்குப் பின்னே திரை மறைவு அரசியல் ஒன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

மூப்பனார் மேல்நிலையிலிருந்து சாகஸ அரசியல் நடத்துவதில பலே கெட்டிக்காரர். அவருக்கு இப்போது மனச்சோர்வு ஏற்பட்டுக்கூட இருக்கலாம். ஆனால் அரசியலல் எழமுடியாத தோல்வி தனக்கு ஏற்பட்டுவிட்டதாக அவர் அவ்வளவு சுலபத்தில் முடிவுக்கு வந்துவிடமாட்டார். ஜெயலலிதாவை சரியாகவே கணித்து வைத்துள்ள அவர், ஜெயலலிதா அரசியல் அனுபவமின்மையால் அவசரப்பட்டுச்செய்யும் காரியங்கள் தனக்குச் சாதகமான சூழ்நிலையைத் தமிழக அரசியல் உருவாக்கும் என்று மனப்பூர்வமாக நம்பிக்கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதாவைவிட கருணாநிதியை நம்புவது காங்கிரஸுக்கு லாபம் என்று மூப்பனாருக்கு ஒரு கணக்கு உண்டு. எப்போது என்ன செய்வார் என்று நிர்ணயிக்கமுடியாத ஜெயலலிதாவை நம்புவதைவிடக் கடுமையாகப் பேரம் பேசினாலும் முடிவுக்கு வந்துவிட்டால் அதை உறுதியுடன் ஏற்று செயல்படுகின்ற கருணாநிதயே மேல் என மூப்பனாருக்குள் ஒரு தீர்மானம இருந்தாலும்ஆச்சாயப்படுவதற்கில்லை. ''கருணாநிதி ஒரு நல்ல நண்பர். தெளிவான விரோதி'' என்று இந்திரா காந்தியிடம் கூட கருணாநிதி பற்றி ஒரு மதிப்பீடு இருந்தது. பல ஆண்டுகள் இந்திரா காந்தியோடு நெருங்கிப் பழகி, கருணாநிதியை நன்கு அறிந்துள்ள மூப்பனார், ஜெயலலிதா கட்சியோடு ஏற்படுத்திக்கொள்கிற உறவைவிடக் கருணாநிதி கட்சியோடு கொள்கின்ற உறவு நம்பகமானதாகஇருக்கக்கூடும் என எண்ணலாம.

அரசியல் களத்தில் எப்போது எது நடந்தாலும் அதற்குத் தயார்நிலையில் தன்னை வைத்துக் கொள்ளக்கூடிய சாமர்த்தியசாலி கருணாநிதி. மூப்பனாரைப் போலவே காங்கிரஸுக்கும் ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சட்டசபைத் தேர்தலுக்குப் பிறகு ஆரம்பமாகியுள்ள உறவு விரைவில் முடிவுக்கு வந்துவிடலாமெனக் கருணாநிதியும் எதிர்பார்ப்பதை போலவே தோன்றுகிறது. இல்லாவிட்டால் காங்கிரஸ் எதிர்ப்பு நிலையில் கருணாநிதி இவ்வளவு மெத்தன உணர்வைக் காட்டிக் கொண்டிருக்கமாட்டார்.

கர்நாடகத்தில் பொம்மை அரசு கவிழ்க்கப்பட்டது குறித்துக் கருணாநிதி கடுமையான கண்டனம் எதையும் தெரிவிக்கவில்லை. தமிழகச் சட்ட மன்றத்தில்கூட தன்னுடைய கட்சிக்காரர்கள் அது பற்றி அதிகம் வாய் திறக்காமல் பார்த்துக்கொண்டார். தக்கர் கமிஷன் அறிக்கையினை வேறு சில சட்ட மன்றங்கள் விவாதித்திருக்க, அது பற்றி தமிழக சட்ட மன்றத்தில் எந்தத் தீர்மானமும் நிறைவேற கருணாநிதி அனுமதிக்கவில்லை. டெல்லியில் பிரதமர் ராஜீவ் காந்தி கூட்டிய பஞ்சாயத்து சம்பந்தமான முதலவர்கள் மாநாட்டைப் புறக்கணிப்பது போல கருணாநிதி பேசினாரே தவிர, முடிவில் தன்னுடைய பிரதிநிதியாக மனோகரனை அந்த மாநாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக தி.மு.க. அங்கம் பெற்றுள்ள தேசிய முன்னணியிலிருந்து தேவைப்பட்டால் விலகிக் கொள்ளுவதற்கான ஒரு பருவ நிலையினையும் முன்கூட்டியே கருணாநிதி முன்னணித் தலைவர்கள் பிடிவாதம் காட்டினல் முன்னணியிலிருந்து விலகிக் கொள்ளவும் தி. மு. க. தயங்காது என கருணாநிதி ஏற்கனவே சாமர்த்தியமாக ஓர் அறிவிப்பினைச் செய்து வைத்திருக்கிறார்.

அதாவது காங்கிரஸைதீவிரமாக எதிர்க்காமல் தேவைப்பட்டால் காங்கிரசோடுஉடன்பாட்டுக்கு வர கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறார் கருணாநிதி. அதே சமயம் தேசிய முன்னணியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கான காரணங்களையும்முன்கூட்டியேசொல்லி வைத்திருக்கிறார். கருணாநிதி என்கிற ராஜதந்திரி இப்படிச் செய்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனல் ஜெயலலிதாவின் போக்கோ இதற்கு முற்றிலும் மாறானதாக இருக்கிறது. காங்கிரசோடு உறுதியான உடன்பாடு ஏற்படுகின்ற சமயத்தில் அவர் என்ன செய்கிறார்?கர்நாடகத்தில் பொம்மை அரசை கலைக்க மத்திய அரசு முடிவெடுப்பதற்கு முன்னதாகவே, அவசர அவசரமாக ஜனநாயக முறையில் சரியல்ல என்று அறிக்கை விடுக்கிறார். இதில அரசியல் தெளிவுமில்லை. ராஜ தந்திர விவேகமும் இல்லை. பாராளுமன்றத்தில் அ. தி. மு. கவின தலைவர் குழந்தைவேலு பொம்மை அரசைகலைக்கசெய்யசொன்ன கருத்து அவருடைய சொந்தக் கருத்தே தவிர கட்சியின் அதிகாரப் பூர்வமான கருத்தல்ல என்று ஜெயலலிதா விளக்கம் அளிக்கிறார்.

ஜெயலலிதாவின் இந்தத் திடீர் அறிவிப்பு காங்கிரஸ் மேலிடத்திலும் குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. ஜனதா தளத்தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டே கேட்டுக்கொண்டதின் பேரில் தான் ஜெயலலிதா இப்படி ஒரு அறிக்கை வெளியிட்டதாக செய்திகள் வெளியாயிற்று. இது உண்மையா என்பது வேறு விஷயம். ஆனல் ஜெயலலிதாவை நம்பி கூட்டணி அரசியல் நடத்துவது எவ்வளவு சிக்கலானது, சிரமமானது என்கிறதை காங்கிரஸ் உணர்ந்துள்ளது.

ஜெயலலிதா கட்சியோடு இணக்கமான உறவு காண விரும்பும் வாழப்பாடி ராமமூர்த்தி போன்றவர்களுக்கும் இது ஒரு இரய சங்கடத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இத்த[illegible] ணத்துக்குள்ளாக[illegible] கொண்டிருப்பவர்கள் மூப்பனாரும் கருணாநிதியும் தான். ''ஜெயலலிதாவோடு ஒத்துப் போவது முடியாதகாரியம்'' என மூப்பனார் காங்கிரஸ் மேலிடத்தைப் பார்த்துக் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கருணாநிதியின் ஒரே நோக்கம் காங்கிரசும் அனைந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும் ஒரணியில்சேர்ந்துவிடக் கூடாது என்பது தான். அந்த அணி பலம் பொருந்திய அணியாக தி. மு. க, அரசுக்கு பெரிய சவாலாக இருக்கும் என்பது கருணாநிதிக்கு நன்றாகவே தெரியும் அதை உடைப்பதை அவர் ஒரு மூக்கியமான அரசியல் பணியாகக்கருதுவார். மூப்பனாரின் ஆதரவாளர்கள் வாழப்பாடி ராமமூர்த்தியை புறக்கணிப்பது கருணாநிதிக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலையினை உருவாக்கியிருக்கிறது.

நிச்சயம் மூப்பனா தன்னுடைய அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டதாக நினைக்கவில்லை. அவர் காத்திருக்கிறார். எதற்காகக் காத்திருக்கிறார்? ஜெயலலிதாவின் காரணகாரியமற்ற போக்குகளால் காங்கிரஸ் மேலிடம் அவருடைய கட்சியோடு உள்ள உறவினை மறுபரிசீலனை செய்யும் நேரம் வரும் என்று அவர் நம்புகிறார். ஜெயலலிதா முன்பின் யோசியாமல் செயல்பட்டால் மூப்பனாரின் எதிர்பார்ப்புகள் வெற்றி பெறும். கருணாநிதியும்கூட ஜெயலலிதா செய்யும் தவறுகளுக்காகக் காத்திருக்கிறார். அதன் விளைவாக காங்கிரஸ் அ. தி. மு. க. உறவு முறிவதால் காங்கிரஸோடு இணக்கமாகிவிட கருணாநிதி தயாராகவே இருப்பார்.

இந்த விஷயத்தில் மூப்பனார், கருணாநிதி ஆகிய இருவரின் எதிர்பார்ப்புகளும் ஒன்றே.

அதனல்தான் காங்கிரஸ் எதிர்ப்பை கருணாநிதி அடக்கி வாசிக்கிறார். தமிழகத்திலுள்ள பெரும்பாலான காங்கிரஸ் சட்டமன்றத்தில் தி. மு. க. அரசுக்கு அவர்கள் காட்டி வந்த எதிர்ப்பின் கடுமையும் இப்போது குறைய ஆரம்பித்திருக்கிறது.

தி.மு.க.—காங்கிரஸ் கூட்டு வருமா? அதை முடிவுசெய்ய வேண்டியவர்கள் கருணாநிதியும் மூப்பனாருமல்ல. ஜெயலலிதா எப்படி நடந்துகொள்ளப்போகிறார் என்பதைப் பொறுத்தே இதன் சாத்தியக்கூறுகள் அமையும்.

ஜெயலலிதா தொடர்ந்து தவறுகள் செய்வார் என்கிற நம்பிக்கையில்தான் மூப்பனாரும், கருணாநிதியும் காத்திருக்கிறார்கள். அவர்களிடையே எழுதாத ஒப்பந்தம் இருந்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

(நன்றி: பொன்மனம்)

---

## வடமராட்சியில் கோமாரி

(நெல்லியடி)

வடமராட்சியின் பல பாகங்களிலும் தற்பொழுது கால்நடைகள் கோமாரி நோய்க்குள்ளாகி இறந்துவருகின்றன.

இதனல் கால்நடைகள் வளர்ப்போர் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன் கோமாரி தடுப்பு ஊசியைத் தமது கால்நடைகளுக்கு ஏற்ற உதவ[illegible]மெனவும் [illegible] அதிகாரி திருமதி ப. [illegible] வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## சேவைக்கால வகுப்பு

(யாழ்ப்பாணம்)

கொத்தணி அதிபர்களின் கல்வி மேம்பாட்டிற்கான சேவைக்கால வகுப்பு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 22-ம், 23-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இரு நாட்கள் நடைபெறும் கொத்தணி அதிபர்களுக்கான சேவைகால வகுப்பில் சகல கொத்தணி அதிபர்களும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---

## நிவாரணப் பணம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

மன்னார் பிரதேசத்திலுள்ள ஆத்திமோட்டை, கோவிற்குளம், பெரியமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கைத்தொழிலாளர்களுக்கான புனர்வாழ்வு நிவாரண உதவிப் பணம் இதுவரை கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நிவாரண உதவிகளைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பொன்னாடை போர்த்திக் கௌரவம்

(திருக்கேதீஸ்வரம்)

திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தில் நடைபெற்ற சேக்கிழார் குருபூசை மகாநாட்டில் சங்கீதபூஷணம், திருப்பனந்தான் ஆதீனப் பண்ணிசைப்புலவர் தமிழிசையரசு நயினை நா. வி. மு. நவரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானம் சார்பாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளால் திரு. நவரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதோடு பொற்கிழியும் வழங்கப்பட்டது.

திருமுறையைப் பண்ணோடிசைக்கும் அவரது பணியைப் பாராட்டி நிகழ்ந்த வைபவத்தில் ஆசி வழங்கிய ஆதீன முதல்வர், ''ஈழத்திலும், தமிழகத்திலும் சைவமும், திருமுறைப்பண்ணும் ஓங்கி வளர்வதற்கு அருந்தொண்டாற்றும் தமிழிசையரசு மென்மெலும் இத்துறையில் சிறந்தோங்க வேண்டுமென்றும் சகல வளங்களையும் பெற்றுச் சைவத்தமிழ் உலகுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து பிறரையும் ஈடேற்ற வேண்டுமென்றும் கூறினர்.

இவ்விழாவுக்கு திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமைதாங்கினர்.

---

### வேம்படி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாலயம் ஒரு முருகன் ஆலயமாக விளங்கியபோதும் உலக மாதாவாம் அன்னை அம்பிகையின் வழிபாட்டில் ஒரு தனிச் சிறப்பான இடத்தைக் கொண்டு விளங்குகின்றது.

ஆரம்பத்தில் வேப்பமரத்தின் கீழ் கோயில் கொண்ட பெருமான் என்பதால் வேம்பா முருகன் என அழைக்கப்பட்டு வரும், இவ்வாலயம் பல வழிபாட்டு முறைகளையும் திருவிழாக்களையும் சிறப்பாகக் கொண்டு விளங்குகின்றது.

வேம்பா முருகன் எம் இடர்கள் யாவும் களைந்து எம்மைக் காத்து அருள் பாலிக்கின்றான் அவனை ''வேம்பா முருகன்'' ஒருமுறை அன்புடன் கூவி அழைத்தால் ஓராயிரம் முறை [illegible]வான். அவனை உள்ளன்புடன் வணங்கி 'புகழ்பாடி' பரவி, அவன் அருளைப் பெற்றுய்வோமாக.

---

## பல்கலைக்கழக மாணவர்கள் சிரமதானம்

[சுன்னுகம்]

பல்கலைக் கழக மாணவர்கள் பங்குபற்றிய சிரமதானப்பணி ஒன்று கடந்த சனிக்கிழமை முழுநாளும் சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

மருதனமடம் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குப் பொறுப்பான கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் யாழ். பல்கலைக் கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த ஒரு தொகுதி மாணவர்களுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி மாணவர்களும் சேர்ந்து சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

---

## கல்யாண மண்டபம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அருகில் இருபது லட்சம் ரூபா செலவில் நவீன முறையிலான அழகிய கலியாணமண்டபமொன்று கட்டப்பட்டுள்ளது.

இம்மண்டபத்தில் நான்கு நீளமான பெரிய அறைகளும் அன்னதானம் வழங்குவதற்கான விசேட வடிவமைப்பிலான அறைகளையும் கொண்டிருக்கிறது.

---

## "குழந்தைப் பாடல்கள்" வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் த. துரைசிங்கம் எழுதிய ''குழந்தைப் பாடல்கள்'' என்னும் கவிதைத் தொகுதி கடந்த வாரஇறுதியில் யாழ். நகரில் சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது பதிப்பாளர் திரு. ஆ. சுப்பிரமணியம் இந்நூலை வெளியிட்டு வைத்தார்.

---

## கல்வி ஊக்குவிப்பு பரிசுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் க. பொ. த. (சாதாரணதர) வகுப்பு மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் வாரிவளவு நல்லியக்க சபையினர் நடாத்திய விஞ்ஞானம். கணிதம் ஆகிய பாடங்களுக்கான முன்னோடிப் போட்டியினை நடாததி அதில் கீழ்வரும் மாணவர்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப்பெற்று முறையே ரூபா 200, ரூ. 150, ரூ. 100 பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

விஞ்ஞானபாடத்தில்: இ. இரத்தினராசா- யாழ்ற்றன் கல்லூரி, ப. பார்த்தீபன்- யாழ். இந்துக் கல்லூரி, ஏ. வருணனந்தா- யாழ்ற்றன் கல்லூரி.

கணிதபாடத்தில்; நா. சிவஞரன் யாழ்ற்றன் கல்லூரி, சி; ஜெயநாதன்- யாழ்ற்றன் கல்லூரி, ப. மகேந்திரராசா- கலாநிதி ஆ. தியாகராசா- மத்திய மகாவித்தியாலயம்.

இவர்களுக்கான மேற்படி பரிசுத்தொகை பரிசுக்குரியவர்களின் பெயரில் கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட்டு வழங்கப்படவுள்ளன.

இப்பரீட்சையில் எட்டு அல்லது ஏழுபாடங்களில் அதிவிசேட சித்திபெறும் மாணவர்களுக்கு கலாநிதி ஆ. தியாகராசா ஞாபகார்த்த பரிசாக ஆயிரம் ரூபா கிராமிய வங்கியில் வைப்பிலிட்டு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அபிராமி அந்தாதி' இலவச நூல்

(அச்சுவேலி)

இடைக்காடு இந்துநெறிக் கழகம் "அபிராமி அந்தாதி" பாடல்களை நூல் வடிவில் அச்சிட்டு இலவசமாக விநியோகித்து வருகிறது.

இடைக்காடு இந்துநெறிக் கழகத்தின் 5வது இலவச பிரசுரமாக இது வெளிவந்துள்ளது.

'அபிராமி அந்தாதி' நூல் பிரதி தேவையானவர்கள் இந்துநெறிக் கழகச் செயலாளர் திரு. வே. சுவாமிநாதனுடன் தொடர்புகொண்டுபெற்றுக்கொள்ளலாம்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



**க. கந்தையா**

தோற்றம்; 11-6-1910 மறைவு: 13-5-1989

எமது தொழிலகத்தில் முகாரியாக (போமன்) கடமையாற்றி... அமரத்துவம் எய்திய அமரர் உயர் திரு. கந்தையா அவர்கட்கு எமது 31ம் நாள் நினைவு அஞ்சலிகள்.

தக்க தருணத்தில் திக்கத்தில் தோன்றியே
மிக்க உயர்ந்தார் எம் கந்தையா,
பக்க பலமென்று எம்தொழிலகம் போற்றவே
துக்கத்தை நீக்கினர் எம் முகாரியாய்,
சிந்தையாலவர் சேவையை எண்ணி நாம்
சந்தோசம் கொண்டாடும் போதினில்.
முந்தையால் வந்த விதி அவர் ஆவியை
ஏந்திய செய்தியும் கேட்டதே!
எல்லோரும் போற்றவே நல்லூரில வாழ்ந்த
எம் வல்லோனினுத்மாவை வண்ணைவைத்தீசா
என்னளும் உன்பாதம் பற்றியே வாழ்ந்திட
வந்து நீர் வரந்தனை கொடுத்தருள்வாயே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ். மெட்டல் தொழிலாளர்கள்·
**சாமுவல் & சன்ஸ் தொழிலாளர்கள்**
யாழ்ப்பாணம். (சி 2945)

## இராசி பலன்

**12-06-1989**

நவமி பின்இரவு 4-09வரை: உத்தரம் பகல் 3-33 வரை; சித்தயோகம். இராகு கலாம் 7-23 முதல் 7-57 வரை. சுப கருமங்களுக்கு ஏற்றதல்ல.

மேடம்!- மனதில் குதூகலம், பணவரவு, மனைவியுடன் உல்லாசம், உறவினர் வருகை. பாராட்டு.

இடபம்:- குளப்பமடைதல், உணர்ச்சிப் பிரவாகம், அன்னியர் தொல்லை, குடும்ப சுகக்குறைவு, நஷ்டம்.

மிதுனம்;- காரியத்தடை, தொழில் பிணக்கு, பணமுடை, மனைவிக்கு ரோகம், மனச்சுமை, அகாலபோசனம்.

கடகம்:- தொழில் லாபம், அதிகாரிகள் பாராட்டு, குடும்ப மகிழ்ச்சி, சகோதரர் உதவி, புகழ்.

சிங்கம்:- கடன்படல் தாய் வழியோசனை, குடும்பப்பிரிவு. அஞ்ஞானவாசம், வேலைப் பளு, கவலை.

கன்னி:- பயணங்களால் நன்மை, புதிய முதலீடு, குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, காதல் உறவு.

துலாம்:- வழிப்பறி, மனதில் சஞ்சலம், குடும்பத்தில் சஞ்சலம், தொழில்நட்டம், அமைதியானபோக்கு.

விருச்சிகம்:- திருமணப் பேச்சு. தந்தையார் உதவி, மனதில் உற்சாகம், உல்லாசம், சிறப்பு.

தனுசு:- புதிய உறவு, குடும்பத்தில் சுபகாரியம், விருந்து பசாரம்- கடிதஉறவு. தொழில் லாபம்.

மகரம்;- சிறுபிணி, மக்களால் கவலை, மனைவிக்கு சந்தேகம், தொழில் பிணக்கு, சோம்பல்.

கும்பம்:- கண்ணியக் குறைவு, வாக்குவாதம், தொழில் லாபக்குறைவு, வீட்டில் பிரச்னை, கடன்.

மீனம்:- விருப்பான செயல், புறங்கூறல். பணவரவு, தொழில் லாபம், தலைமைத்துவம், பாராட்டு.

## 'கிராமிய எழுச்சி மூலமே எதிர்காலம் சுபீட்சமடையும்'

(பருத்தித்துறை)

"கிராமிய எழுச்சி மூலமே எமது எதிர்காலத்தைச் சுபீட்சம் நிறைந்ததாக அமைக்க முடியும். கிராமிய எழுச்சிக்குச் சனசமூக நிலையங்கள் சிறந்த சாதனங்களாகத் திகழ்கின்றன. சனசமூக நிலையங்களைச் சிறப்பாக இயங்கச் செய்து கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரங்களை உயர்த்துவதற்கும் கிராமிய அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கும் கிராமமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு கற்கோவளம் சனசமூக நிலையத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழாவிலும் கலைவிழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி திரு. எஸ். ஞானநேசன் குறிப்பிட்டார். கற்கோவளம் மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் திரு. வி. தர்மகுலசிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. கற்கோவளம் கிராம சேவை அலுவலர் திரு. எஸ். சிவசண்முகம் விழாவை ஆரம்பித்துவைத்தார். கலைவிழாவைக் கற்கோவளம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வி. சோமசுந்தரம் ஆரம்பித்து வைத்தார். திரு. ஞானநேசன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

"சனசமூக நிலையங்கள் வெறும் வாசிகசாலைகளாக மட்டும் இயங்குவதனால் எந்த விதமான பலனையும் எதிர்பார்க்கமுடியாது. சனசமூக நிலையங்கள் கிராமியமக்களின் கல்வி, கலை, கலாச்சாரம் விளையாட்டுத்துறை பொருளாதார அபிவிருத்திபோன்ற பல்வேறு துறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் கிராமிய மூலவளங்களைக்கொண்டுதொழில் முயற்சிகளை ஏற்படுத்தி வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் விமோசனம் வழங்க முன்வரவேண்டும். சனசமூக நிலையங்கள் சிறப்பாக சேவை மனப்பான்மையுடன் செயற்படுமாயின் அக்கிராமப் பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வெற்றியளிப்பதுடன் மக்களின் வாழ்க்கை வசதிகளும் உயர்வடையும்."

கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சிவசண்முகம் உரையாற்றுகையில் கூறியதாவது:

'சனசமூகநிலையங்கள் தங்கள் பகுதி மக்களினது தேவைகள் கிராமங்களில் உள்ள மூலவளங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு தமது பகுதிக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் வேலைத்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி, தொழில்நுட்பபயிற்சி முதியோர் கல்வித்திட்டங்கள் போன்றனவற்றையும் மேற்கொள்ள வேண்டும். சனசமூக நிலையங்களுக்குப் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ் உதவிகள்யாவும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்."

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலக நூலகப் பொறுப்பாளர் திரு. எஸ். திருச்செல்வம், புனிதநகர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ். இராசரத்தினம் ஆகியோர் உரையாற்றினர்.

### கோட்டப்பாடசாலை மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 13, 14ம்திகதிளில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறுகிறது.

14ம் திகதி மாலை நடைபெறும் பரிசில் வழங்கும் வைபவத்தில் யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ். கோட்டக்கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா தலைமையில் இவ் வைபவம் நடைபெறும்.

### மாணவிகள் வலைப்பந்தாட்ட போட்டி

(சுன்னகம்)

இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் பூரணமாக முடிவடையவில்லை என்றும்அரைஇறுதிஇறுதிப்போட்கள் வேறு ஒரு தினத்தில் நடைபெற இருப்பதாகவும் தெரியவருகிறது.

உடறபயிற்சி கல்வி அதிகாரி திரு. க. அருணகிரிராசா மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்தே போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### புதிய நிர்வாகிகள்

(நாவற்குழி)

தச்சந்தோப்பு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் திரு. மு. நாகராசா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது.

பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் செ. அருள்நேசன், உபதலைவர் ந. பத்மரூபன், செயலாளர் பொ. நந்தகுமார், உபசெயலாளர் செ. சந்திரதாசன், பொருளாளர் ந. பத்மசேகர் உப பொருளாளர் ந. ஆனந்தன், நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐந்துபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

0 0 0

(பூநகரி)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் சிக்கனக் கடனுதவு சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகத்தினராக பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ந. பாலசுப்பிரமணியம், தலைவர்: திரு. ச. விசயரத்தினம், உபதலைவர்: திருமதி வ. பரமேஸ்வரி, செயலாளர்: திரு. த. அரியரத்தினம், பொருளாளர்: திரு. இ. பாலசுப்பிரமணியம்.

ஐந்துபேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### மண்டலாபிஷேகம்: சமய நிகழ்ச்சிகள்

(அச்சுவேலி)

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் மகா கும்பாபிஷேகம் கடந்த 8ம் திகதி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் ஜூலை 22ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மண்டலாபிஷேகம் நடைபெறும் காலத்தில் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கல், திருவிளக்குப்பூசை, கும்பாபிஷேக மலர்வெளியீடு, கலைஞரைக் கௌரவித்தல், சமயப் பிரசங்கங்கள்என்பன இடம்பெறவுள்ளன.

## 31-ம் நாள் ஆத்ம சாந்தி பூசையும் நன்றி நவிலலும்



**தியாகராஜா மங்கையற்கரசி**
**(தாயார்)**
**தோற்றம்: 1904**
**இறைவனடி: 23-04-1989**



**தியாகராஜா பாலசுந்தரம்**
**(மகன்)**
**தோற்றம்: 29-08-1939**
**இறைவனடி: 13-05-1989**

23-04-89 அன்று சிவபதம் அடைந்த எமது தாயாரினதும் 13-05-89 அன்று சிவபதம் அடைந்த எமது தலைவன், சகோதரன் அவர்களதும் ஆத்ம சாந்தி பூசை 12-06-89 திங்கட்கிழமை நடைபெறும். அன்னவர்களின் இறுதிக்கிரிகைகளில் கலந்து பலவித உதவி செய்தவர்கள் யாபேருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன், குடும்பத்தினர்.**

38, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
12-06-89.

**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

அரசடி வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(சி-2942)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வுக்கு

(நேற்றைய தொடர்ச்சி)

உடல் மெலிந்தவர்கள். அதிக நேரம் செய்தல் ஆகாது. நோய் இருந்தால் நோய்க்குத் தக்கபடி செய்தல் வேண்டும். 10 நிமிடங்கள் செய்யலாம் சர்வாங்காசனத்தில் நிற்கும் போது தும்மல் கொட்டாவி எச்சில் விழுங்குதல் கூடாது. அப்படிச் செய்யவேண்டிவந்தால் ஆசனத்தை கழற்றி ஓய்வு நிலைக்கு வரவேண்டும்.

### ஹலாசனத்தின் பயன்கள்

அடி வயிறும் அதனுள் அடங்கியிருக்கும் மலக்குடல் மூத்திரப்பை, சுக்கிலம் உறையும் சிறுபை மற்றும் நரம்புச் சக்கரங்கள் கசக்கப்பட்டு, கழிவு நீங்கி, சுறுசுறுப்பு அடைந்து இரத்த ஓட்டத்தை துரிதப்படுத்தி ஆரோக்கிய நிலையைஅடைகின்றன. வயிறு இறுக்கம் அடைகிறது. வயிற்றுச் சதைகள் வலிவு அடைகின்றன. பருத்த தொந்தி கரைகின்றது. தொடைகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று உரோஞ்சப்பட்டு புண்ணுவதும் வராமல் தடைப்படுகிறது. விரைவாக எழும்பவும் நடக்கவும் உதவி புரிவது ஹலாசனம்.

### மயூராசனம்

முழங்கால்களை மடித்து, குதிக்கால்களில் இருக்கவும் முழங்கால்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று அணைத்து முழங்காலுக்கு மத்தியில் கைவிரல்கள் பிறங்கால்களை பார்த்தபடி நிலத்தில் வைத்து முழங்கைகளை மடித்து தொப்புளில் வைத்து, உடம்பைத் தாங்கிய வண்ணம் முன்பக்கம் அட்டைபோல் நகர பின்னங்கால் நிலத்தில் இருந்து மேல்தூக்கப்படும் நிலை மயூராசனம் எனப்படும். இந்நிலையில் இருந்து கொண்டு 4சுவாசம் உள்வெளி இழுத்து விட்டுக்கொண்டு 4வது சுவாசத்தை இழுத்துக் கொண்டு ஆரம்ப நிலைக்கு வரவேண்டும். இவ் ஆசனம் நான்கு, ஐந்து தடவைகள் செய்யலாம்.

### மயூராசனத்தின் பலன்கள்

ஏறுகுடல், குறுக்குக்குடல், இறங்குகுடல், சிறுகுடல் இவைகளின் வேலையைச் சரிவரச் செய்கிறது. மலச்சிக்கல்கள் உண்டாகாதபடி தடைசெய்கிறது. அஜீரணம் வாயு முதலிய தொல்லைகள் நீங்குகின்றன. மணிக்கட்டும் முன்கைச் சதையும் வலிமையடைகின்றன. நீரிழிவு, மூலவியாதி முதலிய வியாதிகளை நீக்குகிறது. முதுகு இளமையை அடைகிறது. பித்தநோய்களைத் தடை செய்கிறது. நித்திரையை உண்டாக்கும் நித்திரை அதிகம் உள்ளவர்களுக்கு நித்திரையைக் குறைக்கும் அருமருந்து மயூராசனம்.

### சர்வாங்காசனம்

விரிப்பில் நிமிர்ந்து படுத்துக் கொண்டு கால்களை மடக்கி முழங்கால்களை நெற்றிக்கு நேரே கொண்டுவந்து பிடரி கழுத்து புஜங்கள் மட்டும் நிலத்தில் பட மற்ற உறுப்புகளைச் செங்குத்தாய் மேலே உயர்த்தவேண்டும் கால்களை உயரத் தூக்கும்போது சுவாசம் வெளியில் விடவேண்டும். கைகளை மடக்கி முழங்கைகளை நிலத்தில் ஊன்றியபடி கைகளால் இரண்டு விலாவையும் பிடித்துக்கொண்டு 90பாகைக்கு வந்து நிறுத்தவும். பிடரி மட்டும்நிலத்தில் இருக்கவேண்டும். அதுதான் பூரண நிலை பதினைந்து சுவாசம் ஒரு நிமிட வீதம் 5நிமிடம் நிற்கலாம். சுவாசம் பூரகரேசகம் செய்து கொண்டு 30 சுவாசம் அல்லது 75 சுவாசம் முடியக் கால்களை மடக்கி ஆரம்ப நிலைக்கு வரவேண்டும். ஓய்வு எடுக்கவேண்டும் 5 நிமிடம் செய்தால் 1 நிமிடம் ஓய்வு எடுக்கலாம். உடம்பு பெருத்தவர்கள் 2 தடவை அல்லது 3தடவைகள் செய்யலாம்.

(வளரும்)

சுவாமிஜி
ஸ்ரீ சிதானந்தயோகி

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
20th Century Presents
VAN RYANS EXPRESS
(C/scope)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்—பிரபு நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி

# 'அரசின் அதிகாரம் பெற்றே அமைப்பாளர் கலந்து கொண்டார்"

(மட்டுநகர்)

கிழக்கு மாகாண அண்மைக் கால அசம்பாவித சம்பவங்கள் நிவாரணப் பணிகள் தொடர்பாக மட்டக்களப்புக் கச்சேரியுல் நடைபெற்ற மகாநாட்டில் அரசாங்கம் அளித்த அதிகாரத்தின் பேரிலேயே ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் கலந்துகொண்டனர் என ஐ. தே. க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்புக் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. கே. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டின் ஆரம்பத்தில் ஐ. தே. கட்சி அமைம்பாளர்கள்கலந்து கொள்வதை அவதானித்த திரு. சாம். தம்பிமுத்து எம்.பி. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதற்கு அரசாங்கம் அதிகாரம் அளித்திருப்பதாக அமைப்பாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்துபலத்த வாக்குவாதங்கள்நடைபெற்று திரு. சாம் தம்பிமுத்து மகாநாட்டைவிட்டு வெளிநடப்புச் செய்தார்.

எனினும் ஐ. தே. கட்சி அமைப்பாளர்கள் கடைசி வரை மகாநாட்டில் இருந்து வெளியேறவில்லை.

# காட்டிக் கொடுத்தவருக்கு 'மின்கம்ப மரணதண்டனை!'

## 3 பொலிசாரும் சுட்டுக்கொலை!!

(கொழும்பு)

தென்பகுதியில் உதவிப் பொலிஸ் அதிபர், பொலிஸ் சார்ஜன்ட், கான்ஸ்டபிள்ஆகியோர் உட்பட நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குருநாகல் உதவிப் பொலிஸ் அதிபர் சந்திரகுப்தா முனசிங்கா திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றுவருகையிலும், பண்டாரவளை பொலிஸ் நிலையக் கான்ஸ்டபிள் குலசிங்கா தமது மனைவியுடன் வரும்போதும், வென்னப்புவ பொலிஸ் நிலைய சார்ஜன்ட் கடமைமுடிந்து திரும்பும் போதும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

களுத்துறையில் இராணுவத்திற்குத் தகவல் கொடுத்ததாக ஒருவருக்குத் தீவிரவாதிகள் மின்கம்ப மரண தண்டனை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மலையக தமிழ் அகதிகளுக்கு மண்சரிவு நிவாரணம் இல்லை!

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ்மக்களுக்கு எதுவித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை. அதே நேரம் மலையகத்திலுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் நிவாரண உதவிகள் வழங்கப் பட்டுள்ளன எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஹட்டன் கரோலினு எஸ்டேட்டில் ஏற்பட்ட மண்சரிவின் காரணமாக 2பேர் மரணமடைந்ததுடன் 7 பேர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரியாயி (45 வயது) என்பவரும் அவரது 30 நாள் வயதுடைய பேத்தியும் சடலமாக மண்ணுக்கு அடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். சிசுவின் தாய் கை கால்கள் முறிந்த நிலையில் நுவரேலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேபோல மண்சரிவில் சிக்கிக்கொண்ட மிகுதி 6 பேர் வட்டவளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

அதே நேரம் மண்சரிவினுலும், வெள்ளத்தினுலும் அகதிகளாக்கப்பட்டுள்ளவர்கள் 4 முகாம்களில்உள்ளனர். வட்டவளை தமிழ் மகாவித்தியாலயத்தில் 22 தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர். இவர்கள் வட்டவளை நகரில் இருந்தவர்கள், வட்டவளை தோட்ட மாரியம்மன் கோயிலில் 123 பேரும், மவுஜீன் எஸ்டேட்டில் 80 பேரும் அகதிகளாக உள்ளனர். மேலும் கடவளைகோயிலில் 53சிங்களஅகதிகளும், 97 தமிழ் அகதிகளும் உள்ளனர். இங்குள்ள தமிழர்களுக்கு அரசினுல் அனுமதிக்கப்பட்ட நிவாரணங்கள் எதுவும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

### நிவாரணம் பெறத் தகுதி அற்றவர்கள்?

அதேசமயம் கடவளை கோயிலில் அகதிகளாக இருந்த 53 சிங்கள அகதிகளைத் தவிர்ந்த ஏனைய 97 தமிழ் அகதிகளும் நிவாரணம் பெறத் தகுதியற்றவர்கள் எனக் காரணம் காட்டித் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப் பட்ட அகதிகளின் லயன்கள் பூரணமாகச் சேதம் அடைந்துள்ளன. எனவே இவர்கள் தெரிந்தவர்கள், நண்பர்களின் லயன்களில் தங்கியுள்ளார்கள் எனக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட இம்மலையகத் தமிழ்அகதிகளுக்கு வண. போல் கெஸ்பல் தலைமையிலான 'சத்யோதய இயக்கத்தின் குழுவொன்று மட்டும் எதுவித பாரபட்சமுமின்றி நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது.

இது பற்றிச் சமூக சேவைகள் அமைச்சுக்கும் அதன் திணைக்களத்திற்கும் முறைப்பாடுகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் எதுவித பலனும் ஏற்படவில்லையென்று அகதிகள் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதி சர்வோதய சிறுவர்பாடசாலைகள்இணைந்து நடத்திய முத்தமிழ் விழா அண்மையில் பூநகரியில் நடைபெற்றது.

பூநகரி சர்வோதய இணைப்பாளர் திரு. இரா. செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சி. க. வேலாயுதபிள்ளை கலந்து கொண்டார்.

# கொத்தணி அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டக்கல்வி அலுவலகத்தில் இம்மாதம் 15ம் திகதிகாலை கொத்தணி அதிபர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம், நல்லூர் சாவகச்சேரி கல்வி வட்டாரங்களைச்சேர்ந்த கொத்தணி அதிபர்கள் இதில் கலந்து கொள்வர்.

# தோட்ட லயன்களிலும் ஆயுதமுனையில் கொள்ளை!

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ் தோட்டத்தொழிலாளர்களின் லயன்களில் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது!

ஆயுதம் தரித்த கோஷ்டிகளே இங்கு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவருகின்றன.

தலவாக்கொல்லையிலிருந்து 6 மைல் தொலைவில் உள்ள கெலீவத்தை தோட்டத்தில் ஆயுதம் தரித்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று இத்தோட்ட லயன்களிலுள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களை பணயக் கைதிகளாக வைத்திருந்ததோடு அவர்கள் அணிந்திருந்த தங்க ஆபரங்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு இக்கொள்ளைக்கோஷ்டி அத்தோட்டத்தில் டீமேக்கராகக் கடமையாற்றும் ஒருவரின் வீட்டில் இருந்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

அதேநேரம் [illegible] இரணை அதிகாலை 2 மணியளவில் ராகலை தமிழ் மகா வித்தியாலய அதிபரின் வீட்டுக்குள் புகுந்த தன்னியக்கத் துப்பாக்கிகளை ஏந்திய6 பேர் கொண்ட கொள்ளை கோஷ்டியொன்று அங்கிருந்து பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்களையும் லக்பிறே. சீனி உட்பட பல உணவுப் பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. அதிபரையும், வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே துரத்திவிட்டே இக்கொள்ளைகோஷ்டி கொள்ளையை நடத்தியுள்ளது. இச்கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு சிலர் சிங்களத்திலும் வேறு சிலர் தமிழிலும் பேசியதாக் கூறப்படுகிறது.

தமிழ் தொழிலாளர்களின் லயன்களில் மட்டுமே இது போன்ற கொள்ளைகள் நடைபெறுவதாகவும் இக்கொள்ளைகள் குறித்து பொலிசாரும் தீவிர விசாரணைகள் நடத்துவதில்லை என்றும் கூறப்படுகிறது. (து)

# நியமனம்

(அச்சுவேலி)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் உப அதிபராக திரு. வே. அந்தோனிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

# சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித. அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவஇறுதிநாட்களான இன்றும் நாளையும் பக்தர்களின் நன்மை கருதி வடமாகாண சென். ஜோன்ஸ் படையினர் சேவையில் ஈடுபடுவர்.

யாழ்.சென்.ஜோன்ஸ் படை அத்தியட்சகர் திரு. என். நகுலராஜ் தலைமையில் இச்சேவை நடைபெறும்.

# பிரான்ஸில் இன்னிசை இரவு

(பாரிஸ்)

பாரதிராஜா, மலேசிய வாசுதேவன் குழுவினரின் "இன்னிசை இரவு" நிகழ்ச்சி அடுத்த மாதம் 2ம் திகதி பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ளது.

மலேசியாவாசுதேவன்,எம். எஸ். ராஜேஸ்வரி, ஷோபனு ஆகியோரின் பாடல்களும், ரி. எஸ், முருகேசுவின் பக்கவாத்திய இசைவிருந்துடன் யுகேன் வாசுவேதனின் தாள வாத்தியக்கச்சேரியும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

விழாவிற்கு வருகைதரும் ரசிகர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளுக்கு திரு. பாரதிராஜா பதில் அளிப்பதுடன் சிறப்புரையும் நிகழ்த்துவார்.

# விசேட உணவு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் கல்விபயிலும் சைவ சமய குருமார்களின் பிள்ளைகளுக்கு மதிய உணவுத்திட்டத்தின் கீழ் விசேட உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சமயக்கோட்பாடுகளின்படிசைவக்குருமார் மற்றவர்கள்சமைத்த உணவை உண்ண முடியாது என்றும் உணவுக்குரிய பணத்தை வழங்குமாறும் மேற்படி சம்பந்தப்பட்ட மாணவர்களின் சார்பாக கோரிக்கை விடப்பட்டுள்ளது.

# இரண்டாம் தவணை

(சுன்னுகம்)

யாழ் மாவட்டப்பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் காலம் ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி வரையும் நடைபெறும்.

ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி தொடக்கம் க. பொ. த.உயர்தரப்பரீட்சை நடைபெறவுள்ளதால் அத்தினத்திற்கு முன்பதாக ஆகஸ்ட் 18ம் திகதியுடன் சகலபாடசாலைகளையும் மூடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

மீண்டும் மூன்றுந்தவணைக்காக சகல பாடசாலைகளும் செப்ரம்பர் 18ந் திகதி ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலசலகூடவசதியின்மையால் கடற்கரை அசுத்தமடைகிறது

## யாழ். மாநகர ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணநகரில்வாழும் மக்களில் நான்கில் ஒருபகுதியினர் சுகாதார வசதிகள் இல்லாமல் இருக்கின்றனர். போதிய மலசலகூட வசதிகள் இல்லாமையினால் கடற்கரை பகுதிகள் அசுத்தமாகின்றன.''

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. எஸ். பாலசிங்கம் நேற்று நடந்த யாழ்ப்பாண மாநகர சனசமூக நிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''கிணற்றில் அள்ளிக் குளிப்போமா? அல்லது 'பைப்' நீரில் பாத்ரூமில் குளிப்போமா? என்று எண்ணுகின்றவர்கள் ஒருபுறமும், குடிநீர் இல்லாமல் இருப்பவர்கள் மறுபுறமும் நமது நகரில் காணப்படுகின்றனர். எனவே மனிதருக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதே இன்றுள்ள முக்கிய பணியாகவுள்ளது. இதனைச்செய்வதற்கு சனசமூக நிலையங்கள் உதவவேண்டும்''.

## பழைய சந்தை வெற்றிடத்தில் நடைபாதை வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடைபாதை வியாபாரம் மீண்டும் இவ்வாரம் முதல் பழைய சந்தையில் உள்ள வெற்றிடத்தில் நடைபெறவுள்ளது.

நேற்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நடைபாதை வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

நடைபாதை வியாபாரிகளான நூற்றுஐம்பது பேரினதும் குடும்ப நிலவரத்தைக் கவனத்திலெடுத்து முன்னுரிமைப்படி நடைபாதை வியாபாரத்துக்குரிய இடங்கள் ஒதுக்கப்படவுள்ளன.

நடைபாதை வியாபாரம் செய்கின்றவர்கள் தமது விண்ணப்பங்களை இன்று சமர்ப்பித்து தமக்குரிய இடங்களைப் பெற்றுக்கொள்வர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதி நடைபாதையில் வியாபாரம் செய்கிறவர்களுக்கு இராமையாச் செட்டியார் வீதியில் வியாபாரம் செய்ய இடம் ஒதுக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

## அமைதிப்படை விலகல்: ரெலோ அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நம்உரிமைகள் நிலைநாட்டப்படும்வரை இந்திய அமைதிப்படையினர் வாபஸ்பெறமுடியாது என்று தமிழீழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

இயக்கத்தின் யாழ். மாவட்டப்பொறுப்பாளர் வி. எம். செந்தோழன் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

''இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்படவேண்டும் தான், ஆனால், தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களுக்குரிய சகல அதிகாரங்களையும், நடைமுறைப்படுத்தும் வரை அமைதிப்படையினர் வெளியேறக்கூடாது. தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளை முன்வைத்து, அமைதிப்படையினரை வெளியேற்ற வழிவகுக்கின்றது. இதனை, தமிழ் முஸ்லிம் மக்கள் நன்குணர்ந்து எமது பிளவுகளைத் தீர்த்து ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும்.

''நம் உரிமைகள் நிலைநாட்டப்படும் வரை, அமைதிப்படையினர் வாபஸ்பெற முடியாது என தமிழ், முஸ்லிம்களாகிய நாம் உறுதிசெய்ய வேண்டும்'',

## மரண அறிவித்தல்

### திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை

திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை காலமானார். அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராசா அந்தோனிப்பிள்ளையின் மனைவியும், ஞானப்பிரகாசத்தினதும், காலஞ்சென்ற நேசத்தினதும் சிரேஷ்ட புதல்வியும், செல்வராசா, ஜோசப் (Post Master C. M. E.) ஜெயம் ஆகியோரின் சகோதரியும், புனிதம் கில்வின் (Engineer U. K.), பெனிட்டா (France), மெற்றின் (Canada), சுசி (Switzaland), டொரெக்ஸ், மதி, யூட் (Canada), ரெமி (Canada), ரொசிஸ்டன் (St. Patricks College, Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரெத்தினம் (Maneging Director of G.P.N. Construction Company Ltd), மனோகரன் (France), மரியநாயகம் (Canada), விஜயரெட்ணம் (Switzaland) ஆகியோரின் அருமை மாமியாரும், நன்சி, நர்கிஷ், சயிலஜா, சஞ்சுதா, அன்ரனி, அனூரியன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திரு. S. J. குணரெத்தினம்
''றேஸ் மஹால்'',
அச்சுவேலி.

(சி 2944)

### நிர்வாகத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். இதன் முதல்கட்டமாக போக்குவரத்து சேவை மாகாண சபையின் நேரடிப் பொறுப்பில் கொண்டுவரப்படுமென்றும் ஏனையவை படிப்படியாக எடுத்துக்கொள்ளப் படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### கல்வி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை மற்றும் திறந்த வெளிப் பல்கலைக்கழகங்களில் கல்வி டிப்ளோமா பயிற்சி பெறுவதற்கு கடமை லீவு வழங்கப்பட உள்ளது பகுதி பகுதியாக இவர்கள் பயிற்சி பெற லீவு வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

விஞ்ஞான பாடம் கற்பிக்கும் தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் மேற்பார்வை செய்வதற்கு தமிழ்மொழி மூலம் விஞ்ஞான கல்வித் திணைக்களங்களிலிருந்தும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சகல சுற்று நிருபங்கள், கடிதங்கள் எல்லாம் தமிழ் மொழியிலும் இருக்கும் என்றும் அமைச்சர் உறுதி அளித்தார்.

### உள்ளூராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் நடைபெற்றது. அங்கு தொடர்ந்து பேசுகையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தாவது:

''யாழ்.மாவட்ட உள்ளூராட்சியுள் அடங்கும் சனசமூக நிலையங்கள் சரியான முறையில் இயங்கத் தவறின் அவைகளைக் கலைத்து விடுவேன்.

''இங்கு பொது வேலைத் திட்டமென்பது இல்லை, இதனால் எதைச் செய்வது, எப்போது செய்வது என்று பொது ஸ்தாபனங்கள் தடுமாறுகின்றன. எனவே சன சமூக நிலையங்களுக்கு சரியான வரையறுக்கப்பட்ட திட்டங்களை மிகவிரைவில் கையளிக்கவுள்ளேன். இவைகளை சகல சமூக நிலையங்கள் நடைமுறைப் படுத்த வேண்டும். உள்ளூராட்சிகளின் திட்டங்களை செயல் படுத்துவதில் சனசமூக நிலையங்களுக்கு மிக முக்கிய பங்குண்டு. எவ்வளவோ இன்னல்களுக்கிடையே வாழும் மக்களை வளம்படுத்த வேண்டும்.

சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. எஸ். லோகசிவம் தமது உரையில் தெரிவித்ததாவது; எமக்கு எந்த அரசும் உதவிசெய்யாது. எமக்குரிய உதவிகளை நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும். இதேபோல ஒவ்வோர் சனசமூக நிலையத்திலும் சமாதானக் குழுவை அமைத்து உங்கள் பகுதிப் பிரச்னைகளைத் திர்க்கபாடுபடுங்கள்'' என்றார்.

யாழ்ப்பாணப் பிரிவு சனசமூகநிலையங்களின் மேற்பார்வை அலுவலர் திரு. ஆர். இரகுநாதன் தலைமையில் யாழ்ப்பாண ச. ச. நிலையங்களின் சமாஜத்துக்குரிய புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப் பெற்றனர்.

இதேவேளை யாழ். மாவட்டம் பூராவுமுள்ள எண்ணூறு சனசமூகநிலசங்களின் பிரதிநிதிகளையும் யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எதிர்வரும் 25ம் திகதி சந்தித்து சனசமூகநிலையங்களுக்கான திட்டங்களை அறிவிக்கவுள்ளார்.

இக்கூட்டம் யாழ். பிராந்திய நட்புறவுச் சங்கத்தில் நடைபெறும்.

## பிரதி சபாநாயகர் நடிக்கும் புதிய திரைப்படம்

(கொழும்பு)

பாராளுமன்றத்திலிருந்து சுடந்தமாதம் 26ம் திகதி வெளிநடப்புச்செய்த பிரதிச் சபாநகயகர் திரு. காமினி பொன்சேகா கடந்தவெள்ளிக்கிழமை வரை நடைபெற்ற நான்கு பாராளுமன்றக் கூட்டங்களுக்கும் சமூகமளிக்கவில்லை.

பாராளுமன்றத்தில் அவர் கூறிய சில வார்த்தைகளை வாபஸ் பெறுமாறு சபாநாயகர் கேட்டுக் கொண்டதை அடுத்து பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச்செய்தது தெரிந்ததே.

பாராளுமன்றக் கூட்டங்களுக்கு அவர் சமூகமளிக்காவிட்டாலும் பரராளுமன்றக் கூட்டங்கள் நடைபெற்ற செவ்வாய், புதன் ஆகியநாட்களில் பாராளுமன்ற வளவில் காணப்பட்டார்.

அதேவேளை இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்தியுள்ளன.

இதேவேளை ''உபதேர்தல்'' என்ற புதிய படத்தில், உபசபாநாயகரான திரு. காமினி பொன்சேகா நடிக்கவிருக்கின்றார். மாத்தறையில் தயாராகவிருக்கும் அப்படத்தைஇவரே இயக்கவிருக்கிறார்.

இப்படத்தில்நடிப்பதற்காக திரு. பொன்சேகா ஒருமாத லீவு பெற்றுள்ளார். இந்த லீவைப் பெறுவதற்காக இவர் 3 வாரத்திற்கு முன்னரே விண்ணப்பித்திருந்தார்.

திரு. பொன்சேகா சிங்களத் திரையுலகில் முன்னணி நடிகர் என்பது தெரிந்ததே.

### அசோகா ஹோட்டலில் அல்ல

வாகனங்களுக்கு பாஸ்வழங்கும் அலுவலகம் மணிக்கூட்டு வீதியில் 6ம் இலக்கத்திலுள்ள கட்டிடத்திலேயே இயங்கிவருகிறது,

கடந்த 7ம் திகதிய 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தியொன்றில் அசோகா ஹோட்டலில் நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள் வரிசையில் நின்றதாக குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும்.

## காவலூர் அந்தோனியார் திருநாள்

(யாழ்ப்பாணம்)

காவலூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் விழா நாளை செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

மன்னார் ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் குருத்துவ வெள்ளிவிழாவின் நன்றித் திருப்பலியாக இவ்வருட திருநாட் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

நாளைக்காலை திருநாட்திருப்பலியும், மாலை திருச்சுருவ பவனியும் இடம்பெறவுள்ளது.

### பாஷையூர் அந்தோனியார்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் தற்போது நடைபெற்றுவரும் நவநாள் திருவிழாவின் 'வேஸ்பர்' இன்று பிற்பகல் நடைபெறும்.

நாளை காலை 6-30மணிக்கு திருநாள் பாடற் கூட்டுப்பூசை நடைபெறும். பிற்பகல் திருச் சுரூபாவனியும் நடைபெறும்.

(வி)

### வாலிபரும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை நாவலர்மடத்தடியில் நெல்லியடி வர்த்தகர் ஒருவர்இனந்தெரியாத வாலிபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். நெல்லியடி வர்த்தகர் சங்குனி என இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து சடலம் உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

### இந்திய வெளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்வாணி தமது கட்சி பதவிக்கு வந்தால் பிராந்தியத்தில் புதிய சவால்களை ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு வெளிநாட்டுக் கொள்கை முற்றிலும் மாற்றியமைக்கப்படும் எனக் கூறினார்.

ஆளும் கட்சி பிராந்தியத்தில் நடுநிலைக் கொள்கையை பின்பற்றத் தவறியிருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

### பாடசாலைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் பாடசாலைகளைத் திறப்பது குறித்து ஆராய்ந்தனர். கொழும்பு தேஸ்டன் கல்லூரியில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் பாடசாலைகளை இன்று திறப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

## நகரசபைத் தொழிலாளர் புதிய சங்கம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபைத் தொழிலாளர்கள் தொழிற்சங்க அமைப்பு ஒன்றினை நேற்று உருவாக்கியுள்ளனர்,

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இத்தொழிலாளர்கள் நேற்றுக்கூடி தமக்குரிய தொழிற்சங்க அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இக்கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபையில் கடமைபுரியும் ஆண், பெண், தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

### வெள்ள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வரப்பட்டது.

மருந்து வகைகள், தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பால் உணவுகள், போர்வைகள், உடுதுணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய இந்தத் தொகுதி நேற்று விமானமூலம் வந்துசேர்ந்தது.

### தென்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் நம்புவதாகத் தெரிகிறது.

இதேவேளை மாணவர்கள் பலர் காணாமற் போவதாகவும் இவர்களை ஆயுதப்படையினர் கைது செய்வதாகவும் எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

### சகல தரப்பின

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நின்று போராடுவோரின் ஆலோசனை மிக அவசியமே என்றார்.

இதேவேளை, தமிழ் கைதிகள் 26 பேரையும் இம்மாத இறுதிக்குள் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் திரு. சங்கர் ராஜி தெரிவித்துள்ளார்.

தாம் ஜனாதிபதியை சந்தித்து நடத்திய பேச்சுக்களையடுத்தே திரு. பிரேமதாஸா தமக்கு கைதிகள் விடுதலை தொடர்பாக உறுதி வழங்கிதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கும் 'ஈரோஸ்' அமைப்பு பிரதிநிதிகள் தொடர்ந்தும் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுக்களை நடத்தலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper atthe Genenral Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org